Registered as Newspaper

# உதயன்


கலை
வர்த்தகம்
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
ஆரம்பம்:05.01.2020 ஞாயிறு காலை 9.00 மணி
A/L 2022
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
A/L 2019 உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் யாழ் மாவட்டத்தில் முன்னனி பெறுபேறுகளுடன்...
A/L DAY CLASS NEC
ஆரம்பம்: 02.01.2020 வியாழன் காலை 9.00 மணி



பக்கங்கள் – 24 | விலை – 30 ரூபா    செய்தி : 021 493 0000    விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :38 மார்கழி 18 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 03 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2050


# தமிழர்களின் பலத்தை மீண்டும் நிரூபிப்போம்

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சபதம்
## எம்.பி.க்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் வியூகம்



*கொழும்பு, ஜனவரி 3*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக தமிழர்களின் பலத்தை மீண்டுமொரு தடவை உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் நாம் உறுதிப்படுத்திக் காட்ட வேண்டும். அதற்காக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் வகையிலான வேலைத்திட்டங்களை இப்போதிலிருந்தே நாம் ஆரம்பிக்க வேண்டும்.

23

## மீண்டும் பொலிஸ் ஊடகப்பிரிவு!

*கொழும்பு, ஜன.3*

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக இயங்காமல் இருந்த பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று

03

## 3 தூக்கில் சாவு

*யாழ்ப்பாணம், ஜன.3*

யாழ்ப்பாணத்தில் நேற்றுமட்டும் மூன்று பேர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

**நவிண்டிலில்...!**

நவிண்டில் கரணவாயைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை (வயது-52) என்ப

23

## இதுவரை கிட்டாததெல்லாம் வடக்குக்கு இனி கிடைக்கும்!

### வடக்கின் புதிய ஆளுநர் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், ஜன. 3*

வடக்கு மாகாணத்தில் சேவையாற்றுவது இலேசான விடயம் அல்ல என்பது எனக்குத் தெரியும். வடக்கு மக்களின் ஏக்கங்களை, அவர்களின் அபிலாசைகளை தீர்த்துவைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே ஜனாதிபதி என்னை வடக்கு மாகாணத்துக்கு ஆளுநராக நியமித்துள்ளார் இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநராக நேற்றுத் தனது கடமைக

23



## அரசியல்கைதி சாவு!

*கொழும்பு, ஜன.3*

26 வருடங்களாக மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதி ஒருவர் உடல்நலக் குறைவால் நேற்று உயிரிழந்தார்.

03

## குளத்தில் மூழ்கிச் சாவு

*வவுனியா, ஜன.3*


வவுனியாவில் தீர்த்தமாடுவதற்காகக் குளத்தில் இறங்கிய இளைஞர் ஒருவர்

03

### முச்சந்தி முரளி



"கலைகிறதும் பேந்து திரும்ப அமைகிறதும் என்டு அரசாங்கம் பிழங்கிறது எல்லாமே தேவையில்லாத ஆணிதானே"




## விஜயதாசவின் வியூகத்துக்கு ஜே.வி.பி எதிர்ப்பு!

*கொழும்பு, ஜன.3*

சிறுகட்சிகளுக்கு பொதுத் தேர்தலில் வேட்டு வைக்கும் வகையிலும், மீண்டும் ஜனாதிபதிக்கான அதிகாரங்களை பலப்படுத்தும் நோக்கிலும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்சவால் முன்வைக்கப்

03

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஈ.பி.டி.பியினருக்கு எதிராக போராட்டம்

*யாழ்ப்பாணம், ஜன.3*

ஈ.பி.டி.பியினருக்கு எதிராகவும், அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராகவும் காணாமல் ஆக்கப்பட்டோரின்

03






சிறுக சிறுக சேமித்து உங்கள் எதிர்காலத்தை வளமானதாக்குங்கள்

DFCC ஜூனியர்

DFCC ஜூனியர் சிறுவர் சேமிப்புக் கணக்கில் ரூபா.10,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்புச் செய்தால், புதிய வருடத்தில் முதலாம் தவணைக்காக பாடசாலை செல்லும் சிறுவர்களுக்கு பெறுமதிமிக்க பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதியும், தண்ணீர்ப் போத்தலும் பரிசாக வழங்கப்படும்.

2019 டிசெம்பர் 15 முதல் 2020 ஜனவரி 15 வரை மட்டுமே.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது. கையிருப்பு உள்ள வரை மட்டுமே.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# முள்ளிவாய்க்கால் முடிவோடு இனப்பிரச்சினைக்கும் தீர்வு!

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் காலம் பிந்திய கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜன. 3

**முள்ளிவாய்க்காலில் போர் முடிவடைந்த கையோடு நாட்டில் இனப்பிரச்சினையும் முடிவுக்கு வந்துவிட்டது. பிரபாகரன் தலைமையிலான புலிகள் அமைப்பு அழித்தொழிக்கப்பட்டதே அந்தப் பிரச்சினைக்கான தீர்வாகும் என்று கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

அத்துடன், பிரிவினைவாத அரசியலை முன்னெடுத்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒதுக்கி ஓரங்கட்டிவிட்டு, தமிழ் மக்களுடன் அரசு நேரடியாக தொடர்புகொள்ள வேண்டும் என்று மேற்படி அமைப்பின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

சுதந்திர தினத்தில் தமிழ்மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று முன்வைக்கப்பட்டுவரும் கோரிக்கைகள் மற்றும் அரசியல் தீர்வு திட்டம் தொடர்பில் நேற்றுக் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் சிங்கள மொழியில் மாத்திரமே இசைக்கப்பட வேண்டும். தேசிய கீதம் எவ்வாறு இசைக்கப்பட வேண்டும் என்று அரசமைப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. வங்குரோத்து நிலையிலுள்ள பிரிவினைவாத தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் மக்கள் மத்தியில் வீரர்களாகும் நோக்கிலேயே புதுப்புது பிரச்சினை களை கிளப்பி வருகின்றனர்.

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் சிங்கள மொழியில் மட்டுமே சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அப்போது தமிழிலும் பாடப்பட வேண்டும் என தமிழ் மக்கள் கோரவில்லை. எனவே, அரசியல்வாதிகளே வீண் பிரச்சினை களை உருவாக்குகின்றனர்.

புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டகையோடு நாட்டில் இனப்பிரச்சினையும் முடிவுக்குவந்துவிட்டது. போர் முடிவே அப்பிரச்சினைக்கான தீர்வாக அமைந்துவிட்டது. எனவே, இனி அரசியல் தீர்வு பற்றியெல்லாம் கதைக்கவேண்டிய அவசியமில்லை. பாதிக்கப்பட்ட அப்பாவி தமிழ் மக்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக தமிழ்ப் பிரிவினைவாதிகளை கவனத்தில் கொள்ளகூடாது. இந்திய பிரதமர் நரேந்திரமோடியை முன்னுதாரணமாகக்கொண்டு சில விடயங்களில் இந்த அரசு முடிவுகளை எடுக்க வேண்டும் - என்றார். (ஒ.5.44)




# பெரும்பான்மை இல்லை என்றாலும் பயமில்லை!

## அரச தரப்புக் கருத்து

நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லாவிட்டாலும் தாம் எந்தவொரு பயமும் இன்றி இன்றைய நடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்றுமதி விவசாய இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எந்தவொரு பிரச்சினையும் இல்லை. நாளை (இன்று) நாடாளுமன்றில் புதிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கொள்கை விளக்க உரையை ஆற்றவுள்ளார். அதனால் எந்தவொரு காரணத்துக்காகவும் நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கப் போவதில்லை. அதற்கான தேவையும் எமக்கு இல்லை. 69 இலட்சம் மக்களின் எதிர்ப்பார்ப்பை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.

எனினும், இந்த நாடாளுமன்றத்தில் 69 இலட்சம் மக்களின் பிரதிநிதிகள் இடம்பெறவில்லை. அதனாலேயே இந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என நாம் தெரிவிக்கின்றோம். மக்களின் எதிர்ப்பார்ப்பை நிறைவேற்றக்கூடிய நாடாளுமன்றை உருவாக்க வேண்டும். ஜனாதிபதிக்குக் கிடைக்கப்பெறுகின்ற முதல் வாய்ப்பிலேயே அவர் அதனை மேற்கொள்வார் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

எமக்கு 19 ஆவது அரசமைப்பின் பிரகாரம் நான்கரை ஆண்டுகளுக்கு முன்னர் நாடாளுமன்றைக் கலைக்க முடியாத காரணத்தால் மேலும் 2 - 3 மாதங்களுக்கு இவ்வாறு பயணிக்க நேரிடும். அதனால் நாம் எந்தவொரு காரணத்துக்காகவும் நாடாளுமன்றத்தை மீண்டும் தள்ளிவைக்கப் போவதில்லை. நாம் எந்தவொரு பயமும் இன்றி சவாலுக்கு முகம்கொடுக்கவுள்ளோம் - என்றார். (ம-22)

# ஆளுநர்களை இங்குள்ளோரே பழுதாக்குகின்றனர்

## அவைத்தலைவர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 3

'வடக்கில் பணியாற்றிய எல்லா ஆளுநர்களையும் நாம்அறிவோம். வரும்போது எல்லாரும் நல்லவர்களாகத்தான் வருவார்கள். அதன் பின்பு இங்கு உள்ளவர்கள் அவர்களைப் பழுதாக்கி அனுப்புவதே வழமை" இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம்.

வடமாகாண ஆளுநர் பி.எம்.சாள்ஸின் பதவியேற்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபையின் காலத்திலும், அதன் பின்னரும் பணியாற்றிய எல்லா ஆளுநர்களையும் அறிவோம். வரும்போது எல்லாரும் நன்றாகத்தான் வருவார்கள். அதன் பின்பு இங்கு உள்ளவர்கள் பழுதாக்கி அனுப்புவதே வழமை. எமது மண்ணின் பிரச்சினையை அறிவீர்கள். இங்கு வந்தவர்களில் மூவர் சகோதர இனத்தினர். நான்காவது ஆளுநர் தமிழர் ஆனால் வடக்கைச் சாராதவர். ஆனால் சாள்ஸ் வடக்கைச் சேர்ந்த தமிழர். சிரமமான பதவியாக இருந்த வடக்கு மாகாண ஆளுநர்களில் பலிகக்கார சிறந்த ஆளுநராக இருந்தார். அதே பின்புலத்தில் வரும் நீங்களும் சிறந்து விளங்கி உயர்வுற வேண்டும் என்றார். (ம-105,26)

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 - 12 - 1958

இறப்பு 02 - 01 - 2020

### சாமினி ஞானநாதன்

(ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர்)

திருகோணமலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாமினி ஞானநாதன் நேற்று (02.01.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தியாகராஜா, பாக்கியவதி தம்பதிகளின் அனபு மகளும் காலஞ்சென்ற கதிரேசு வள்ளியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கதிரேசு ஞானநாதனின்(காணிஉத்தியோகத்தர்) அன்பு மனைவியும் வசந்தன்,காலஞ்சென்ற ராஜினி மற்றும் வரதன், சாந்தினி, முகுந்தன், பிரசாந்தன், ஆகியோரின் சகோதரியும் தனுசன், டிலக்சுமி, அருள்பிரியன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி பத்மாவதி நாகரத்தினம், தேவகி, புவானந்தன், திருமதி வாணி இந்திரகுமார்,மாதவன், ஞானசம்பந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (03.01.2020) சங்கத்தானை, சாவகச்சேரியிலுள்ள மைத்துனியின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 4.00 மணியளவில் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கத்தானை சாவகச்சேரி

075 530 3235, 077 127 0202

தகவல் : குடும்பத்தினர்

## அரசியல்...

மட்டக்களப்பு, மொறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த செல்லப்பிள்ளை மகேந்திரன் ( வயது -46) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

1993 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் வைது கைது செய்யப்பட்டிருந்த இவர், அதன் பின்னர் மகஸின் சிறைச்சாலையில் அரசியல்கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். கடந்த சில நாட்களுக்கு முன்னர் உடல்நலக் குறைவால் , அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்தநிலையிலேயே புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## மீண்டும்...

முன்தினம் புத்தாண்டுடன் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரசின் உயர் மட்டத்தில் இருந்து வழங்கப்பட்டுள்ள ஆலோசனைக்கு அமைய பதில் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன விடுத்த விசேட பேரில் பொலிஸ் ஊடகப் பிரிவு தனது பணிகளை மீள ஆரம்பித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவின் பணிப்பாளராக பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி ஜாலிய சேனாரத்ன நியமிக்கப்பட்டு, அவர் தனது பதவியை நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார். (அ)

## குளத்தில்...

தாமரைக்கொடியில் சிக்குண்டதால் பரிதாபமாக உயிரிழந்தார்.

ஈச்சங்குளம் பகுதியை சேர்ந்த ஜெகநாதன் துஷ்யந்தன்(வயது-27 )என்ற இளைஞரே இவ்வாறு சாவடைந்தவராவார்.

வவுனியா ஈச்சங்குளம் பிள்ளையார் ஆலயத்தில் பிள்ளையார் கதை தீர்த்தமாடல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட , இளைஞர் ஒருவர் நீராடுவதற்காகக் குளத்தில் இறங்கிய போது, தாமரை கொடியில் சிக்கி நீரில் மூழ்கினார். இதனைக் கண்ணுற்ற ஊர்மக்கள் அவரை மீட்பதற்கு முயற்சி செய்தனர். சுமார் 20 நிமிடம் போராட்டத்தின் பின்னர் நீரில் மூழ்கிய இளைஞர் மீட்கப்பட்டு, வவுனியா மருத்துவமனைமனையில் சேர்க்கப்பட்ட போதும், அங்கு அவர் உயிரிழந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-110)

## ஜே.வி.பி...

பட்டுள்ள இரண்டு தனிநபர் பிரேரணைகளுக்கும் ஜே.வி.பி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அத்துடன், இவ்விரு பிரேரணைகள் தொடர்பிலும் அரசின் நிலைப்பாடு என்னவென்று ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று கேள்வி எழுப்பினார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள சில சரத்துகளை மாற்றியமைத்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்களை பலப்படுத்தும் நோக்கில் அரசமைப்பின் 21ஆவது திருத்தச்சட்ட மூலத்தையும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக்குழு தேர்தல் மாவட்டமொன்றில் ஆசனத்தை பெறுவதற்காக குறைந்தபட்சம் 5 சதவீத வாக்குகளை பெறவேண்டும் என்ற நிலையை 12.5ஆக அதிகரிக்க வேண்டும் என கோரி 22ஆவது திருத்தச் சட்ட மூலத்தையும் தனிநபர் பிரேரணைகளாக முன் வைத் துள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது கருத்து வெளியிட்ட விஜித ஹேரத் எம்.பி. கூறியவை வருமாறு:

'அரசமைப்பில் திருத் தத்தை கோரி விஜயதாச ராஜபக்சவால் 21 மற்றும் 22ஆவது திருத்தச்சட்டமூலங்கள் தனிநபர் பிரேரணைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன. இவை விஜயதாசவின் தனிப்பட்ட நோக்கமா அல்லது அரசின் தேவைப்பாடா என கேட்க விரும்புகின்றோம். அதுமட்டுமல்ல இது இவ்விரு பிரேரணைகள் பற்றி அரசு தனது நிலைப்பாட்டை விரைவில் அறிவிக்க வேண்டும்.

மாறுபட்ட நிலைப்பாடுகளை கொண்டுள்ள அரசியல் கட்சிகளின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை மட்டுப்படுத்துவதே ஒரு பிரேரணையின் நோக்கமாகும். குறைந்தபட்ச வாக்குவீதமான 5 வீதத்தை 12.5ஆக அதிகரிக்க முனைவதானது பலகட்சிகள் கலாசாரத்தை அழிக்கும் செயலாகும். இதனால், சிறுகட்சிகளுக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக்கூட இழக்கநேரிடும்.

நல்லாட்சிக்காக பல கட்சிகளினதும் ஆலோசனைகள் அவசியம் என்பதாலேயே குறைந்தபட்ச வாக்குவீதமாக 5 நிர்ணயிக்கப்பட்டது. இந்த நிலையில் அதனை மாற்ற முற்படும் விஜயதாசவின் முயற்சியானது பெரும் அநீதியாகும். அதேபோல் 19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் இருந்து குறைக்கப்பட்ட அதிகாரங்களை மீள பெற்றுக்கொடுக்கும் நோக்கில் மற்றுமொரு பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. இதனையும் ஏற்கமுடியாது. இந்த முயற்சியை ஜனநாயக விரோத செயலாகவே கருதவேண்டும்- என்றார். (ம-22-44)

## ஈ.பி.டி.பியினருக்கு...

உறவுகளால் நேற்றையதினம் பெரும் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

'டக்ளஸ் தேவானந்தா கைது செய்யப்பட வேண்டும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டும்', கைது செய் கைது செய் ஈ.பி.டி.பியை கைது செய்', 'தமிழரை அழிப்பதில் அரசுடன் இணைந்து தீவிரமாக செயற்பட்ட்து ஈ.பி.டி.பி', வவுனியாவில் காணாமல் போனவர்கள் மீது தாக்குதல் நடத்திய அத்தனை ஈ.பி.டி.பியினரையும் கைது செய்' உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

குறித்த போராட்டம் நடைபெற்றபோது அங்கு இரு வாகனங்களில் பொலிஸார் வரவழைக்கப்பட்டு ஈ.பி.டி.பி கட்சி அலுவலகத்துக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது.

அத்தோடு, போராட்டத்தைக் குழப்பும் வகையில் ஈ.பி.டி.பியின் பிரசாரப் பாடல்கள் உரத்த தொனியில் ஒலிபெருக்கி மூலம் அலறவிடப்பட்டிருந்தன. அதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்த பதாகைகளை மர்ம நபரொருவர் பறிக்கமுற்பட்டதாலும் பதற்றம் ஏற்பட்டது. (ம-26,ரி1)

# நாடாளுமன்றத்தினது 4ஆம் கூட்டத்தொடர் இன்று

எட்டாவது நாடாளுமன்றத்தின் 4ஆவது கூட்டத்தொடர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் இன்று முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஜனாதிபதிக்கு சம்பிரதாயபூர்வமாக வரவேற்பளிக்கப்பட்ட பின்னர் 10 மணியளவில் அவைகூடும். இதன்போது ஜனாதிபதியால் கொள்கை விளக்க உரை (சிம்மாசன உரை) முன்வைக்கப்படும். வெளிநாட்டு தூதுவர்கள், மாகாண ஆளுநர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களும் இன்று நாடாளுமன்றம் வருகை தந்து, சபாநாயகர் கலரியில் அமர்ந்து, சபை நடவடிக்கைகளை அவதானிப்பார்கள்.

ஜனாதிபதியின் சிம்மாசன உரை முடிவடைந்த பின்னர் சபை தற்காலிகமாக ஒத்திவைக்கப்படும். அதன் பின்னர் பிற்பகல் ஒரு மணியளவில் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நாடாளுமன்றம் கூடும். சபாநாயகர் அறிவிப்புவேளையின்போது, எதிர்க்கட்சி தலைவராக சஜித் பிரேமதாச ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை, சபாநாயகர் சபைக்கு அதிகாரப்பூர்வமாக அறிவிப்பார். அடுத்ததாக புதிய உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்வார்கள்.

ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த பின்னர் டிசம்பர் 3ஆம் திகதியே நாடாளுமன்றம் கூடவிருந்தது. எனினும், ஜனாதிபதி எட்டாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இடைநிறுத்தினார். இந்த நிலையிலேயே இன்று சபை கூடுகின்றது. (ம-44)

**அளவெட்டி மல்லாகம்
ப.நோ.கூ.சங்கம் (வ - து)**

**பதவி வெற்றிட விண்ணப்பத்திகதி நீடிப்பு**

எமது சங்கத்தால் **12.12.2019** ஆம் திகதியன்று **உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பதவி வெற்றிடம் தொடர்பான** விளம்பரத்தில் **கிளைமுகாமையாளர் 208/15 பதவியுடன் மேலதிகமாக பெற்றோல் நிலையத்தில் கடமையாற்ற விரும்புபவர்களுக்கு முன்னுரிமை** வழங்கப்படும் என்ற திருத்தத்துடன் சகல விண்ணப்பங்களுக்குமான முடிவுத்திகதி **31.01.2020** என நீடிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றேன்.

தலைவர்,
03.01.2020 அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்.

**வேலையாள் தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் வியாபார ஸ்தாபனம் ஒன்றுக்கு அப்பகுதிக்கு அண்மையில் உள்ளவர்கள், வயதெல்லை **19 - 23** வரை மற்றும் க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த ஆண்கள் மட்டும் கணினி தரவுகள் பதிவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

**அடிப்படைச் சம்பளம் - 15,000/=**

தொடர்பு கொள்ளவேண்டிய நேரம்
காலை **9.00 - 11.00** வரை.
**(சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்)**

CS278791(16/17)

**077 663 6384**

**BARATHY**
சித்தன்கேணி

நாளை மறுதினம் ஆரம்பம்
**A/L 2022**
**கலை, வர்த்தகம்**
ஆரம்பம் - ஜனவரி 05

பிரபல்யம் மிக்க முன்னணி ஆசிரியர் குழுவினால்

பொருளியல் - R.தர்ஷன்
கணக்கீடு - V.S திருக்குமரன்
வணிகக்கல்வி - S.K பாலசபேஷ்
I.C.T - T.தேவதர்ஷன்
தமிழ் - N.பாலா, N.குகபரன்
இந்துநாகரீகம் - A.மேனன்
அளவையியல் - E.S பவன்
புவியியல் - P.S. குமரன்
வரலாறு - K.சுதன்
அரசியல் - S. கோகுலன்
ஊடககற்கை - N. கஜிதரன்
நாடகம் - T.ஜெயசுதன்
விவசாயம் - S.சஞ்ஜீவன்
கிறிஸ்தவம் - S.யுபின்சன்
சித்திரம் - S.சபேசன்
ஆங்கிலம் - N.நிசாந்தன்

உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்

**A/L Day Class** மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

Note-
தரம் 6 முதல் 11 வரை
பிரிவு 2 நாளை ஆரம்பம்
04/01/2020 காலை 7.00 மணி
புதியமாணவர்கள்அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

**பொருளியற்கல்லூரி**
நாவலர் வீதி யாழ்ப்பாணம் | கே.கே. எஸ் வீதி சுன்னாகம்
(இரு இடங்களிலும்)

நாளை மறுதினம் ஆரம்பம்
**A/L 2022**
**கலை வர்த்தகம்**
ஆரம்பம் - ஜனவரி 05

யாழ்.மாவட்டத்தின் பிரபலம் பெற்ற முன்னணி ஆசியர் குழுவினால்

பொருளியல் - R. தர்சன் (யாழ்ப்பாணம், சுன்னாகம்)
S.மகேந்திரன் (சுன்னாகம்)
கணக்கீடு - B.முகுந்தன்
வணிகக்கல்வி - S. பிரதீபன்
தமிழ் - N. சத்தியவேந்தன்
இந்துநாகரீகம் - P.ஜோதீஸ்வரன், A.மேனன்
அளவையியல் - S.சயந்தன், N. ஜெயசுரேஸ்
புவியியல் - P.S. குமரன்
வரலாறு - K.சுதன்
அரசியல் - S. கோகுலன்
ஊடககற்கை - N. கஜிதரன்
I.C.T - T.சுதர்ஷன்
விவசாயம் - S சஞ்சீவன்
நாடகம் - T.ஜெயசுதன்
கிறிஸ்தவம் - S.யுபின்சன்
இந்துசமயம் - A.மேனன்
சித்திரம் - S.சபேசன்
சங்கீதம் - S. குமுதினி
மனைப்பொருளியல் - K.றஜிதா
ஆங்கிலம் - N. நிஷாந்தன்

உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்
A/L Day Class கலைவர்த்தகப்பிரிவு திங்கள் முதல் வெள்ளிவரை ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

தொழில்நுட்பப்பிரிவு
இயந்திர தொழில்நுட்பம்
S.ஜெயக்குமார், A.நிசாந்தன்
N.P நிஜாந்தன்
தெழில்நுட்ப விஞ்ஞானம்
A.ரவீந்திரன் S.செந்தூரன், A.அருள்நேசன்
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்
M.A நிறோஜன்

ஏனைய பாடங்கள் எமது பொருளியற் கல்லூரி விரிவுரையாளர்களினால் நடைபெறுகின்றன
உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்

**077 376 3511**

## யாழ்ப்பாணம் விமான நிலையத்தில்

# 2ஆம் கட்ட அபிவிருத்திக்கு அமைச்சரவை அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திக்காக இந்திய அரசுடனான ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் 2.26 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டுக்கு விடப்பட்டுள்ளது. இதன் இரண்டாவது கட்ட அபிவிருத்தி இந்திய அரசின் நிதியுதவியில் இருந்து மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. இதற்கமைய இந்திய அரசின் நிதியில் மேற்கொள்வதற்கான அனுமதிக்கான பிரேரணை, நேற்றைய அமைச்சரவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனையடுத்து, விமான நிலையத்தின் அடுத்த கட்ட அபிவிருத்திப் பணிகள் சுமார் 3 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

(ம-105)

## நன்றி நவில்கின்றோம்

கடந்த 28.12.2019 இல் காலமான
எமது தாயார்

**திருமதி**
**ஜோண் பெப்ரிஸ் பிலோமினம்மா**

அவர்களின் மரணச்சடங்கில் பங்குபற்றி எமது துன்பத்தில் பங்குகொண்டு அவரது ஆத்மசாந்திக்காக செபித்து ஆறுதல் கூறிநின்ற யாழ். ஆயர், குருக்கள், துறவிகள், அரச உயர் அதிகாரிகள், உறவினர்கள், நண்பர்கள், அனைவருக்கும் எமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை 04.01.2020 சனிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு சுண்டிக்குழி புனித யுவானியார் ஆலயத்தில் இடம்பெறும் திருப்பலியில் பங்குபற்றவும்.

தொடர்ந்து இல.88 A கோவில் வீதியில் அமைந்துள்ள எமது இல்லத்தில் இடம்பெறும் மதியவிருந்தில் கலந்து கொள்ளவும் அன்புடன் அழைக்கின்றோம்.

அருட்பணி J.P அன்ரனி
பங்குத்தந்தை, OLR, யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 06 . 1937
மறைவு 02 . 01 . 2020

**திருமதி ஸ்ரனிஸ்லோஸ் மாசில்லாமணி**
(இளைப்பாறிய அதிபர் - தாளையடி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்)

தாளையடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரனிஸ்லோஸ் மாசில்லாமணி நேற்று (02.01.2019) வியாழக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் றேமன் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக 02.01.2020 முதல் வைக்கப்பட்டு இறுதி ஆராதனைகள் நாளை 04.01.2020 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பொறளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: அமுதினி அன்ரன் போல் (மகள்)
+94 777 380 020, +94 772 733 794

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **செல்லத்துரை சிவா** அவர்களின் பாசமிகு தாயார்

**செல்லத்துரை புஸ்பரத்தினம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், நல்லூர்

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர்
நா. சுந்தரேசன் அவர்களின் தாயார்
**திலகவதி நாகேந்திரன்**
அவர்கள் 31.12.2019 அன்று காலமானார்
அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
ஆசிரியர் வட்டம்

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை மகேந்திரம் (குஞ்சன்)



தோற்றம் 01.09.1952 மறைவு 01.01.2020

சுதுமலை வடக்கு, ஈஞ்சடி வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மகேந்திரம் (குஞ்சன்) கடந்த (01.01.2020) புதன்கிழமை அகாலமரணமடைந்தார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈச்சடி வைரவர் கோயிலடி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

தகவல்:-
குடும்பத்தினர்.

### திருமதி வனஜாதேவி மகேஸ்வரன்



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வனஜாதேவி மகேஸ்வரன் நேற்று **(02.01.2020)** வியாழக் கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - வைரமணி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சுப்புலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும், மகேஸ்வரனின் அன்பு மனைவியும், சிவதர்சன் (பொலநறுவை, அந்நூர் முஸ்லீம் மகா வித்தியாலய ஆசிரியரும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவனும்) அவர்களின் பாசமிகு தாயாரும், கஸ்தூரிதேவி, காலஞ்சென்ற கலாதேவி, மற்றும் வாசுகிதேவி, கதிரவேலு (பாபு), கமலவேணி, புஸ்பலதா, சிவராணி ( ஆசிரியர், மு/ மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மகாலிங்கம், மற்றும் பகவதி, பார்வதி, காந்திமதி, காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் பிரபாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(03.01.2020)** வெள்ளிக்கிழமை முற்பகல் **10** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


அரசடி வீதி,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்பு:- 077 247 8481

## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை யோகராசா



காசிப்பிள்ளை யோகராசா கடந்த (01.01.2020) புதன்கிழமை அன்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50/1, பலாலிவீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்

## துயர் பகிர்கின்றோம்



**எமது கல்லூரி ஆசிரியர் த.தயாளன்**
அவர்களது தாயார்
**தர்மராசா சரஸ்வதி**
அவர்கள் நேற்று (02.01.2020) வியாழக்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,**
**ஆசிரியர் வட்டம்**
(CS/30330)(11,17)

## மரண அறிவித்தல்

### திருமதி பவளம்மா கோவிந்தன்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.504, வளநகர் யோகபுரத்தில் வசித்து வந்தவருமாகிய திருமதி பவளம்மா கோவிந்தன் நேற்று (02.01.2020) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வத்திலிங்கம் கண்ணாத்தை தம்பதிகளின் அன்பு மகளும் ஐயம்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கோவிந்தனின் பாசமிகு துணைவியாரும் பொற்கலை (ஆசிரியர் - அணிஞ்சியன்குளம் தமிழ் வித்தியாலயம்). பொற்சிலை. கௌரிதரன். முரளிதரன் காலஞ்சென்ற துவாரறஜனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் புவனேஸ்வரன் (பிறைவிழி வாணிபம். மல்லாவி). சிவாநந்தராசா. கலையமுதா (ஆசிரியர். ஆனைவிழுந்தான் தமிழ் மகாவித்தியாலயம். நிறஞ்சனா (ஆசிரியர்- வன்னிவிளாங்குளம் அ.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ரேணுஷா. டிலக்ஷா. மதிநிலா. விதுர்சன். பிறைவிழி. தருணிகா. டர்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற ஐயாத்துரை. வெற்றிவேலு. செல்லாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மரகதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சேதுபதி. சரஸ்வதி. லட்சுமி. மரகதம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2020) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில வளநகர். யோகபுரத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலியாறு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 075 3670 தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 05 . 1935
மறைவு 02 . 01 . 2020

### திருமதி சரஸ்வதி தர்மராசா

ஆவரங்கால் கிழக்கு. மணற்பகுதி. புத்தூரைப் பிறப்பிடமாகவும். கைதடி தெற்கை (சந்தி) வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி தர்மராசா நேற்று (02.01.2020) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - கதிராசி தம்பதிகளின் ஏகபுத்திரியும். காலஞ்சென்றவர்களான இளையவன் - சிகப்பி தம்பதிகளின் மருமகளும். காலஞ்சென்ற தர்மராசாவின் பாசமிகு மனைவியும். காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி (கரவெட்டி). இளையகுட்டி (கவிஞர் - புத்தூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான இராசரத்தினம். சந்தனம். நல்லம்மா மற்றும் வசந்தாதேவி. ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் மைத்துனியும். அருமைத்துரை - தர்மதேவி (கனடா). தயாளன் (ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி). தயாபரன் (UK). மதிசிங்கம் தர்மரூபி (கைதடி). ஸ்ரீபண்டாகரன் தர்மலோஜினி (உரும்பிராய்). தயாரூபன் (UK) ஆகியோரின் பாசமுள்ள தாயாரும். அருமைத்துரை (கனடா). ஜெயக்குமாரி. ராஜ்குமாரி (ஜரின் - UK). மதிசிங்கம் (கைதடி). ஸ்ரீபண்டாகரன் (யாழ்.பல்கலை ஊழியர். உரும்பிராய்). றோஜினி (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும். அரவிந்தன் (UK). ஆனந்தன் (ஆசிரியர் - கொழும்பு). ஆனந்தன் துமிலா (கனடா). ஆரூரன் (கனடா).கஜிர்தன். பவதாரணி. பிரசன்யா. மதுமிலன். சரன் (UK). சஞ்சி (UK). சச்சின் (UK). எழில்செல்வன். சினேகன். புவன். மதுரகன். மதுகரன். அஸ்மிதா. அன்சிகன் ஆகியோரின் பேர்த்தியும். விவாஸ். வர்சா. கிருஷ்ணிகா. விகாத். அஸ்வின். திஷாரா. சாருஜன். அஸ்றிதன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.01.2020 ஞாயிற்றுக்கிழமை கைதடியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கைதடி தெற்கு ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
**கைதடி தெற்கு.** (CS/30318)(11,17) **குடும்பத்தினர்.**

**077 618 4524**

---

மாநகரசபை. யாழ்ப்பாணம்
மாநகர வரியிறுப்பாளர்களுக்கான முக்கிய அறிவித்தல்

### 2020ம் ஆண்டு ஆதனவரி வீத அதிகரிப்பு

யாழ் மாநகரசபையின் 08.08.2019ம் திகதிய பொதுச்சபை கூட்டத்தீர்மானத்தின் பிரகாரம் ஆதனவரி வீத அதிகரிப்பானது நிலம். வதிவிடங்கள் என்பவற்றுக்கு 8% ஆகவும். வியாபார நிறுவனங்களிற்கு 10% ஆகவும் அதிகரிக்க சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கௌரவ ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டது. இந்த அனுமதியானது 01.01.2020லேயே எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே 02.01.2020இல் இருந்து மேற்படி வீதங்களில் ஆதனவரி அறவிடப்படும். எனவே 01.01.2020 இல் ஆதனவரி செலுத்தியவர்கள் அதிகரிக்கப்பட்ட தொகையை நிலுவையாக செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். 2020 ம் ஆண்டுக்குரிய வரவு செலவு திட்டத்தின் அடிப்படையில் மாநகர மக்களுக்கு மேலும் வினைத்திறனான சேவையை வழங்க இவ்வதிகரித்த வீத கட்டண அறவீட்டை மேற்கொள்ளவேண்டிய தேவை உள்ளது. சகல மாநகர மக்களும் இந்த அதிகரித்த வீதத்தினை செலுத்தி சபையின் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். இதனால் தங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்கு மனம் வருந்துகின்றோம்.

**முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

---

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**தவராசா கபிஷாந்**
அன்னை மடியில்
25.04.1994

அரக்கர்களின் அழிவில்
03.01.2016

மரணம் இயற்கையின் நியதி - எம்
மனம் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது
உன்னை நீரினுள் வீழ்த்தியவர்களை
சட்டமும் தண்டிக்கவில்லை - ஐயா!
ஆண்டவன் தண்டிப்பான் என்ற நம்பிக்கையுடன்

18. ஈச்சங்காடு, அரியாலை,
யாழ்ப்பாணம். 076 971 5618
என்றும் உன் நினைவுகளுடன் வாழும்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 07 . 1943
மறைவு 31 . 12 . 2019

### திருமதி யேசுரட்ணம் நேசமலர்

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யேசுரட்ணம் நேசமலர் 31.12.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசமணி தம்பதியரின் அன்பு மகளும். யேசுரட்ணத்தின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம். செல்வநாயகம் மற்றும் இராசலஷ்மி. நாகராசா. சண்முகலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சாந்தினிதேவி (கனடா). சசிதேவி (சுவிஸ்). சந்திரமோகன் (கனடா). ஈசன் (கனடா). சுதன் (கனடா). வஷ்சலன் (பிரான்ஸ்). மகேந்திரன் (சவுதி). சறோயினிதேவி. ராணி. சகிகலா. சசிலா. சந்திரகலா. சுகிலா. செந்தில்குமார் (குமார்). ஜெயநாதன் (சொக்கன்). ருஷாணி. சிந்துயா. வினோத். பிரியா. சுகந்தன். அஜந்தன் ஆகியோரின் பாசமிகுந்த மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு மானிப்பாய் பிப்பிலிமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சுதுமலை வடக்கு.**
**மானிப்பாய்.**
**செ.நாகராசா**
**(சகோதரன்)**

**077 972 4167** (c23037)(13.17)

---

# பல்கலை மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராக பேராசிரியர் சம்பத் அமரதுங்க

கொழும்பு, ஜன. 3

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராக சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த நவம்பரில் ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ச பதவியேற்ற பின்னர் நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களின் பேரவையில் அங்கம் வகிக்கும் வெளிவாரி உறுப்பினர்களை உயர்கல்வி அமைச்சின் செயலாளரது அறிவுறுத்தலுக்கு அமைய டிசெம்பர் 20ஆம் திகதியுடன் பதவி விலகுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் மொகான் டி சில்வா கடிதம் மூலம் கோரியிருந்தார்.

இதனையடுத்து அனைத்துப் பல்கலைக் கழகங்களின் பேரவையும் டிசெம்பர் 20ஆம் திகதியுடன் செயலற்றுப்போயின. அதேநேரத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர்களும் தமது பதவிகளிலிருந்து விலகிக் கொண்டனர். தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து மானியங்கள் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமனமும் பல்கலைக்கழக பேரவைகளின் மீள் உருவாக்கமும் விரைவில் இடம்பெறும் என்று நம்பப்படுகிறது. (ம)

---

**கடைக்கு ஆள் தேவை**
அஸ்மி மொத்த வியாபாரக் கடைக்கு கணக்காளர் (பெண்) தேவை.
**077 790 6224**
பலாலி றோட், உரும்பிராய்.

**தென்னங்கன்று விற்பனைக்கு**
நல்ல இன தென்னங்கன்று மொத்தமாக விற்பனைக்குண்டு.
**077 921 3835**

**வேலையாள்கள் தேவை**
இல.194, யாழ் வீதி. மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பொதி செய்வதற்கு ஆள்கள் தேவை.
மேலதிக விபரத்திற்கு:-076 640 3388

**காணி விற்பனைக்கு**
இயக்கச்சி கோவில் வயலில் வீட்டுடன் கூடிய 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 227 7533

**Architectural CAD Centre**
Personal & Group Classes
2D-DRAWING &
3D-MODELING
**Auto CAD**
LINK: 076 9000064 / 071 8617972

**வீடு வாடகைக்கு**
கிளிநொச்சி திருநகர் கண்ணன் கோயிலுக்குப் பின்புறமாக சகல வசதிகளுடன் கூடிய வீடு பெண்களுக்கு அறைகள் வாடகைக்கு விடப்படும். (AKN/390)(11,17)
**077 921 3835**

**வேலைவாய்ப்பு**
யாழ் நகரில் இயங்கும் பிரபல ஹோட்டல் ஒன்றுக்கு 35-40 வயதுக்கு உட்பட்ட கணக்காளர் தேவை. கணினி. ஆங்கிலம் அறிவு உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
(சிங்களம் மேலதிக தகைமையாக கருதப்படும்.)
தொடர்பு:- 021 222 1356

## மரண அறிவித்தல்

பிறப்பு
30
.
04
.
1995



இறப்பு
26
.
12
.
2019

# கண்ணன் ஜேம்ஸ்சன்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கண்ணன் ஜேம்ஸ்சன் கடந்த (26.12.2019) வியாழக்கிழமை இந்தோனேசியாவில் அகாலமரண மடைந்தார்.

அன்னார் மயிலிட்டியைச்சேர்ந்த வில்வமணி கண்ணன் - காசிப்பிள்ளை, ஜெசிந்தா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் ஜெனிஸ்ரன் (பிரான்ஸ்), வினிஸ்ரன் (மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2020) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
மருதனார் மடம்

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
17
...
04
...
1941



மறைவு
02
...
01
...
2020

# கணேசு இராசநாயகம்

பலாலியை பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு இராசநாயகம் நேற்று **(02.01.2020)** வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசு செல்லம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து கமலம் தம்பதிகளின் அன்பு மருமகனும் தவனேஸ்வரியின் அன்பு கணவனும் கமலாதேவியின் சகோதரனும் துஷந்தி, சுதர்ஷன், பிரஷந்தி, நிதர்ஷன் ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்ற குணரட்ணம் மற்றும் மலர், நரேஸ்குமார், விதுஷா ஆகியோரின் அன்பு மாமாவும் ஹர்ஷிபன், தனுவர்ஷன், ஷயூரி, ஆகனா, அர்த்தனா, மேதிஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் **(05.02.2020)** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் **09.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

# சிவலிங்கம் சத்துருக்கன்

யாழ். வயாவிளானைப் பிறப்பிடமாகவும், கனடா **Brampton**ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சத்துருக்கன் கடந்த **(31.12.2019)** செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.



அன்னார் சிவலிங்கம் - நந்தினிதேவி தம்பதிகளின் பாசமிகு கடைசி புத்திரரும், கயந்தன், தட்சாயினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் குருபரன், நித்தியா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாருயா, திசான் ஆகியோரின் அன்பு மாமாவும், அகரா அவர்களின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

R.N. நிரோசன் - 077 929 9667
கயன் - சகோதரர் -+164 7985 4743

**தகவல்:-**
**நண்பர்கள் (கோண்டாவில்)**

# மரண அறிவித்தல்கள்



தோற்றம் 30 ... 05 ... 1939

மறைவு 02 ... 01 ... 2020

## செல்லத்துரை புஷ்பரத்தினம்

வாதரவத்தையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை புஷ்பரத்தினம் நேற்று **(02.01.2020)** வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னப்பிள்ளை தம்பதியினரின் ஏகபுதல்வியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பார்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வராணி மற்றும் விஜேஸ்வரி, மகேந்திரநாதன், இரத்தினேஸ்வரி, இரஞ்சினி, சிவா (நிர்வாக கிராம அலுவலர்- பிரதேச செயலகம், நல்லூர்) காலஞ்சென்றவர்களான அருள், சந்திரவதனி, ஜெயா (குடும்ப நல உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரசேகரம் காலஞ்சென்ற சண்முகராசா, நிர்மலாதேவி, திருஞான சம்பந்தர், விஷ்ணுதாசன் கஸ்தூரி, சின்றிமோகன் (பொது சுகாதாரப் பரிசோதகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், இரத்தினமணி, அழகதுரை, கிருஸ்ணானந்தம், தவமணிதேவி, குணராஜா ஆகியோரின் அன்பு அக்காவும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, பராசக்தி , கந்தையா மற்றும் விமலாதேவி, குணபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சர்மிளா காலஞ்சென்றவர்களான துஷ்யந்தன், கிந்துஷன் மற்றும் மதிவதனி, மதிவதனன், மதிவண்ணன், காலஞ்சென்ற மயூரி மற்றும் கேதுசன், கிந்துஷா, திலீபனா, ஜெனோசன், லக்சிகன், சாண்மதி, ஜனன், நிரோஜன், தர்மிசன், அப்சனா, சீரானனி, அட்சயன், லேசவி, சோவித் ஆகியோரின் பேர்த்தியும் யமுனா, கவீந்திரன், மதுசன், அபிஷா, அபிநயா, அபிநயன், டிலக்சனா, மயூரி, அஞ்சனா, திலக்சன், திலக்சனா ஆகியோரின் பூட்டியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(03.01.2020)** வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் **2.00** மணியளவில் தகனக்கிரியைகளுக்காக வாதரவத்தை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வாதரவத்தை, புத்தூர்.** **தகவல்:- குடும்பத்தினர்**

**தொடர்பு:- 077 055 8956**



பிறப்பு 20 . 05 . 1933

இறப்பு 01 . 01 . 2020

## கார்த்திகேசு சண்முகலிங்கம்

யாழ்.மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சண்முகலிங்கம் 01.01.2020 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - சிவகாமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கலா, அன்னைபூபதி மற்றும் சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புத் துணைவரும், குமாரலிங்கம், காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் சச்சிதானந்தம் (சுவிஸ்), கலாநிதி (சுவிஸ்), உருத்திரா (கொழும்பு), சாந்தலிங்கம் (சுவிஸ்), வசந்தகுமாரி (கனடா), இராசகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இரத்தினம், பவளம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், மலர்விழி, சிவநாயகி, காஞ்சனா, கந்தலிங்கம், தருமரத்தினம், சர்மினி, நாகராசா, மோகனபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், றதீஸ்வரன், தர்சன், விருட்சிகா, தனுசன், சுலக்ஷன், சிவதரணி (வித்தியா), அஜந்தா, அபிநயா, அனுசியன், அபர்ணன், கஜேந்தினி, பிரதீபன், கஜீபன், ஜெயலக்ஷன், பரத், சுவேகா, நர்த்திகா, நாகரூபன், துர்க்கா ஆகியோரின் அன்புப் பேரனும், மோலிகா, வகீசன், ஸாய்ரா, தேஜான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(IN/12150)(11,17) **தகவல்:- குடும்பத்தினர்.**

# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING (CODL), UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**கலைமாணி பட்டப்படிப்பு 2017/2018**

**(வெளிவாரி) (புதிய பாடத்திட்டம்)**

**BACHELOR OF ARTS DEGREE PROGRAMME – 2017/2018**

**(EXTERNAL) (NEW SYLLABUS)**

**(SEMESTER BASED COURSE UNIT SYSTEM AND GRADE POINT AVERAGE EVALUATION)**

## புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை – 2020

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த கலைமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

* க.பொ.த. (உ/த) பரீட்சை – 2017 அல்லது அதற்கு முன்னர் அங்கீரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருப்பதுடன், பொது அறிவுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 30% மான புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

**அல்லது**

* தேசிய கல்வியியல் கல்லூரியில் கற்பித்தலில் டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றவர்கள்

**அல்லது**

* ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்றப்பட்ட அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள்

**அல்லது**

* பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய மேற்குறித்த தகைமைகளுக்கு தொடர்புடைய அல்லது சமமானது என கருதப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள்.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். (பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்)

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:**

01. **விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

02. **தபால் மூலம் பெற விரும்புவோர்**
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இணையத்தளத்தில் (www.codl.jfn.ac.lk) தரப்பட்டுள்ள ரூபா 500 க்கான கொடுப்பனவுச் சீட்டை பதிவிறக்கம் செய்து, அருகில் உள்ள மக்கள் வங்கி கிளையொன்றில் கொடுப்பனவினை மேற்கொண்டு, சுய முகவரியிடப்பட்ட ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும்

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

என்ற முகவரிக்கு நேரடியாக அல்லது தபால் மூலமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி :**

**14.02.2020 (வெள்ளிக்கிழமை). (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**

**மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.**

**பதிவாளர்**
**31.12.2019**

(IN/12129)(11,17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 07.12.2019 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர்
## நாகமுத்து காராளபிள்ளை



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (06.01.2020) திங்கட்கிழமை காலை 7 மணியளவில் நயினாதீவு புனித கங்காதரணி தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

எம் ஐயாவை நாம் இழந்து தவித்தவேளையில் எமக்குக் கண்ணீர் அஞ்சலிகள், மலர்வளையங்கள், பனர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்து கலந்துகொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**5 ஆம் வட்டாரம், நயினாதீவு.** **குடும்பத்தினர்.**

# நல்லூர்

# ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தானம்

(நல்லூர் சிவன் கோவில்)

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2020

## 3 ஆம் நாள் உற்சவம்



நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா தேவி சமேத கைலாசநாத சுவாமி தேவஸ்தானத்தின் மார்கழி மஹோற்சவத்தின் முன்றாம் நாள் உற்சவத்தின் சிறப்பு பிரம்ம சிரச்சேத உற்சவம் ஆகும்.

முன்னொருகாலத்தில் கிருதயுகத்தில் படைத்தல் கடவுளான பிரம்மா ஐந்து முகங்களை உடையவராக விளங்கினார். யார் பெரியவர் என்ற போட்டி பிரம்மா விஷ்ணுவிற்கு இடையே ஏற்பட சிவ பெருமான் சோதி வடிவமாக தோன்றி இச் சோதியில் அடி முடியினை யார் கண்டுபிடிப்பவர்களோ அவர்களே பெரியவர் என அசரீரி கூறினார். பிரம்மா அன்னவடிவெடுத்து இச் சோதியில் முடியினை காணவும் விஷ்ணு பன்றி உருவெடுத்து அத்சோதியின் அடியினையும் காணாதுபோயினர். பிரம்மா முடியிணைக் காண மேலே சென்றபோது ஒரு தாழம்பூ கீழ் நோக்கி வருவதினைக் கண்டு வினவ அப்பூதம் சிவனார் முடியிலிருந்து வழுவி பலயுகங்களாக கீழ்நோக்கி வருவதாகவும் கூற பிரம்மா தாம் சிவபெருமானின் முடியை கண்டதாகவும் பொய்கூறி தாழம்பூவை சாட்சியாக கூறியதாகவும் அதன் விளைவாகவே சதாசிவ வடிவத்திற்கு நிகரான வடிவை நீக்குதற் பொருட்டு சிவபெருமான் பிரம்மனின் ஒரு தலையை கிள்ளி எறிந்ததாக இதற்கு பொய் கூறிய தாழம் பூவையும் தம்பூஜையில் நின்று நீக்கியதாகவும் கூறப்படுகின்றது.

தெய்வீகவியல் கதையினை புராணங்கள் கூறிநிற்கின்றன லிங்கபுராணம், சிவபுராணம், பத்ம புராணம் இக்கதையினை கூறி நிற்கின்றன.

சிவாகமங்களுள் சிவனது மூர்த்தி பேதங்களுள் இருபத்தைந்தினுள்ளும் இடம்பெறுவதும் சிவனது அட்ட வீராட்டான செயல்களில் பிரம்மசிரச்சேத மூர்த்தி என அழைக்கப்படும் இந்நிகழ்வு திருக்கண்டியூரில் நிகழ்ந்ததாக அறியப்படுகின்றது.

சிவாகமங்கள் பிரம்மசிரச்சேத மூர்த்தியின் ரூபத்தியானத்திலும் கூறி நிற்கின்றன.

இக்கதை மரபில் பிரம்மா பொய் கூறியதற்காக அவருக்கு ஆலயங்கள் அமைவதில்லை எனவும் சிவனது தலையினின்றும் நீங்கி வந்த தாழம்பூ பொய் கூறியதால் சிவபூஜைக்கு தாழம்பூ ஆகாதெனவும் உட்பொருளினை உணர்த்தும் இத்தத்துவத்தை கூறிநிற்கும் இந்த உற்சவத்தை கண்டு ஏகி சிவனது பெருங்கருணையினை பெற்றுய்வீர்களாக

**03/01/2020 வெள்ளி பிரம்ம சிரச்சேத உற்சவம் மாலை 4.00 மணி - அபிஷேகம்**
**6.00 மணி - வசந்த மண்டப பூஜை, உள்வீதி, வெளிவீதி உற்சவம்.**

உற்சவநேரங்களில் ஏழுநல்லூர் பாலமுருகன் குழுவினரின் விஷேட தவில் நாதஸ்வர கச்சேரி இடம்பெறும்

### உபயகாரர்கள்

நியூராம் கென்செக்சன் - நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தயன் பிளாசா - மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
கோட்டல் லவுசியா - மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்

Cargills food city

# ஒரே நாடு. ஒரே இடம். ஒரே விலை

உங்கள் அனைத்து விதமான அத்தியாவசிய உற்பத்திகளுக்கும் ஆகக்குறைந்த விலைகள்



ரூ. 77.00 சிவப்பு பச்சரிசி 1kg*

போதிய கையிருப்பு உள்ளது
இச்சலுகையில் பில்லொன்றுக்கு அதிகூடிய கொள்வனவு 10kg

ரூ. 99.00 வெள்ளைச் சீனி 1kg*

ரூ. 114.00 மைசூர் பருப்பு 1kg*

ரூ. 94.00 சம்பா வெள்ளை பச்சரிசி 1kg*




ரூ. 192.00 மைசொய்ஸ் மெக்கரல் 425g

10% கழிவு முழுக்கோழி இறைச்சி



சேமிப்பு ரூ. 43.00

ரூ. 387.00 க்றிஸ்ப்றோ/டெல்கோ/பைரஹா/CIC/பிர்மா/நியூ அந்தனீஸ் முழுக் கோழியிறைச்சி 1KG

2020 ஜனவரி 08 வரை மட்டுமே. நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

சேமிப்பு ரூ.50 அனைத்து பால்மா பக்கற்கள் 1kg




இவற்றில் அதிகூடிய கொள்வனவு 3 அலகுகள்.
2020 ஜனவரி 08 வரை மட்டுமே. நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

இச்சலுகை அதிகபட்சம் 10kg வரை மாத்திரமே செல்லுபடியாகும். 2020 ஜனவரி 08 வரை மட்டுமே. இருப்பு உள்ளவரை மட்டுமே. நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Cargills food city
வீடு செல்லும் போது

Cargills SINCE 1844

இந்துமதி

# மௌனத்தை கலைக்குமா தமிழ்த் தேசிய கூட்டமைப்பு?



பௌத்த சின்னங்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிறுவுவதற்காக நல்லாட்சி அரசு 500 கோடி ரூபாவைப் பாதீட்டில் ஒதுக்கியதாகவும், அது தொடர்பாக வாயே திறக்காமல் இருப்பதற்காகத் தமிழ்த் தலைவர்களுக்கு 300 கோடி ரூபா வழங்கப் போவதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் என்வும் புதியதொரு குற்றச்சாட்டை முன்னாள் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு**

விக்னேஸ்வரன் தமிழ்த் தலைவர்களென எவரைக் குறிப்பிட்டார் என்பது புரியவில்லை. வழக்கம் போன்று அவர் கூட்டமைப்புத் தலைவர்களையே குறிப்பிட்டிருப்பாரென அனுமானிக்க முடிகிறது. ஏனென்றால் கூட்டமைப்பின் மீது குற்றஞ்சுமத்துவதையே அவர் தமது வாடிக்கையாகக் கொண்டிருக்கின்றார். தமிழ்த் தலைவர்களென அவர் கூட்டமைப்பினரைக் குறிப்பிட்டிருந்தால் கூட்டமைப்பின் தலைமையை அவர் ஏற்றுக் கொள்கின்றார் என்றும் அர்த்தம் கொள்ள முடியும். தமிழ்க் கூட்டமைப்பால் அரசியலுக்குள் புகுத்தப்பட்டவர் தான் விக்னேஸ்வரன். தமிழர்கள் பல திசைகளிலும் பிளவுபட்டு நிற்பதற்கும் இவரும் காரணம் எனலாம். தலைமைப் பொறுப்பில் அமர்ந்து விட வேண்டும் என்ற துடிப்பே இவரிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது. தற்போது மாற்றுத் தலைமை தொடர்பாகவே அவர் அதிகளவில் சிந்திப்பதுடன் பேசியும் வருகின்றார். தம்மைத் தமிழர்களின் தலைவராக அனைவரும் மதிக்க வேண்டும் என்பதே அவரது குறிக்கோளாகவும் காணப்படுகின்றது.

**கூட்டமைப்புக்கு எதிரானவர்கள்**

கூட்டமைப்பினர் தம் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு உடனுக்குடன் பதில் வழங்குவதில் தவறிவிடுகின்றமை மிகப்பெரிய குறைபாடாகவே காணப்படுகின்றது. இதனால் குற்றங்களை அவர்கள் ஏற்றுக் கொண்டவர்களாகின்றனர். இன்றைய தமிழ் அரசியலை நோக்கும்போது கூட்டமைப்பு தனித்து நிற்பதைப் போன்றதொரு தோற்றப்பாடு காணப்படுகின்றது.

தற்போதுள்ள நிலையில் கூட்டமைப்பின் பங்காளிகளான புளொட், ரெலோ தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகள் கூட்டமைப்புக்கு எதிரான அணியிலேயே காணப்படுகின்றன. தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமானால் கூட்டமைப்பை வீழ்த்தவதே ஒரே வழியென அவை கருதுகின்றன - மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்ற எந்தவிதமான குறிக்கோளும் அவற்றிடம் காணப்படவில்லை. இதற்கு மாறாக அனைத்து விடயங்களுக்கும் கூட்டமைப்பின் மீது பழியைப் போட்டுவிட்டுத் தப்பிக்கவே அவை முயலுகின்றன.

**தடைகள் இல்லை**

விக்னேஸ்வரன் குறிப்பிட்ட வடக்குக் கிழக்கில் பௌத்த சின்னங்களை நிறுவுகின்ற செயற்பாடுகள் தற்போதும் தொடரவே செய்கின்றன. அரசின் ஆசீர்வாதம் இதற்குக் கிடைப்பதால் இந்தக் காரியத்தை முன்னெடுப்பதில் எவ்வித தடைகளும் ஏற்படுவதில்லை. ஆனால் இந்த நிலை தொடருமேயானால் காலப்போக்கில் தமிழர்களுக்கெனத் தனி அடையாளங்களே இல்லாமல் போகின்ற நிலை உருவாகிவிடும்.

இவற்றுக்கு எதிராக ஒன்றிணைந்து போராட வேண்டியதமிழ் அரசியல்வாதிகள் ஒருவரையொருவர் குறை கூறுவதையும், குற்றம் சுமத்துவதையும் மட்டுமே தமது வேலையென நினைக்கின்றனர்.

கூட்டமைப்புத் தவிர்ந்த ஏனைய அரசியல்வாதிகள் கூட்டமைப்பினால் தமிழர்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லையெனக் கருதினால் தாமே களத்தில் இறங்கிப் போராடுவதில் எவ்வித தடையும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் இதைச் செய்வதற்கு ஏனோ அவர்கள் தயங்குகின்றனர். இவர்கள் வெறுமனே அறிக்கை விடுவதால் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்பட்டுவிடப் போவதில்லை

**ஏமாற்றம்**

ரணில் தலைமையிலான அரசு தமது தேவைகளுக்காகக் கூட்டமைப்பைப் பயன்படுத்தியதையும், கூட்டமைப்புக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் ஏமாற்றிவிட்டதையும் கூட்டமைப்பின் தலைவர்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.







கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் சஜித் பிரேமதாசவுக்குக் கூட்டமைப்பின் தலைமை வழங்கிய ஆதரவு பயனற்றுப் போய்விட்டது.

கூட்டமைப்பின் வேண்டுகோளின் பிரகாரம் தமிழ் மக்கள் சஜித்துக்கே தமது வாக்குகளை அமோகமாக அளித்த போதிலும் இதுவே கோத்தாபய ராஜபக்ஷ சிங்கள மக்களின் அமோக ஆதரவைப் பெறுவதற்கும் காரணமாகி விட்டது. இந்த விடயம் இத்துடன் முடிந்து விடவில்லை. முஸ்லிம் மக்கள் சஜித்துக்கு வாக்களித்ததன் பயனையும் தற்போது அனுபவித்து வருகின்றனர்.

புதிய அரசமைப்பில் ஒரு ராஜாங்க அமைச்சராகக் கூட முஸ்லிம்கள் நியமிக்கப்படவில்லை. நல்லாட்சி அரசில் பிரதான அமைச்சர் பதவிகளை முஸ்லிம்கள் வகித்த நிலையில் கோத்தபாய அரசில் அவர்கள் முற்றாகவே புறக்கணிக்கப்பட்டமை முஸ்லிம்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்திவிட்டது.

**ஒற்றுமை அவசியம்**

சிங்கள அரசியல்வாதிகள் சிறுபான்மையினத்தவர்கள் தம்மை அண்டியவர்களாக வாழவேண்டுமென நினைப்பதால் இத்தகைய நிலை ஏற்பட்டு விடுவதைத் தவிர்ப்பது கடினமாகவுள்ளது. தமிழர்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென்றால் முதலில் தம்மிடையே ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தமக்குள் நிலைகொண்டிருக்கும் பதவி ஆசைகளைத் துறந்து விட வேண்டும். தமது இன மக்களின் துயரங்களை முன்னிறுத்தி அவர்களுக்கான தீர்வைக் காண்பதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். ஒருவர் மீது வேறொருவர் குறை கூறிக் கொண்டிருப்பதைத் தவிர்த்துவிட வேண்டும். கூட்டமைப்பும் வாய் மூடி மௌனியாக இருப்பதை விடுத்து தம்மீதான குற்றச்சாட்டுக்களுக்கு உடனுக்குடன் உரிய பதிலை வழங்க வேண்டும். அவர்களது மௌனம் குற்றச்சாட்டுக் கள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு விடுவதாகவே அமைந்துவிடும்.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சுதி கூடும் இனவாதம்

நல்லாட்சிக் காலத்தில் அடக்கி வாசித்த பேரினவாதத் தரப்புக்கள், கோத்தாபய ஜனாதிபதியானதும் குளிர்விட்டுப் போய் மீண்டும் தம் விஷ நாக்குகளுக்கு வேலை கொடுக்கத் தொடங்கிவிட்டன. தனிச் சிங்கள மக்களின் வாக்குகள் மூலமே தான் ஆட்சிக்கு வந்ததாகக் கூறிக் கள்ளும் ஜனாதிபதி கோத்தாபய, அடுத்து வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என்பவற்றின் போதும், இனவாத அஸ்திரமே இலக்குகளை வீழ்த்துமென நம்புகிறார். அதனால் தான் ஊட்டி வளர்த்த இனவாதக் குஞ்சுகளை இஷ்டப்படி இரைதேட அனுமதித்து அதை ஊக்குவித்து வருகின்றார். இதனால் இப்போது பொதுபல சேனாவில் இருந்து, தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பு வரை, இனவாத நெருப்பை மூட்டி, நன்றாக நீட்டி நிமிர்ந்து குளிர்காய்ந்துகொண்டிருக்கின்றன. வெறுவாயை மென்று கொண்டிருந்த இந்த இனவாத அமைப்புகள் தனிச்சிங்களத் தேசிய கீதம் என்ற அவல் கிடைத்ததால் புளுகத்தில் துள்ளிக் குதிக்கின்றன.

தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தனிச் சிங்களத்தில் தான் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டு எனச் சொல்லத் தொடங்கி, கடைசியில் " இலங்கையில் நிலவிய இனப்பிரச்சினைக்கு, முள்ளிவாய்க்காலோடு முற்றுப்புள்ளி வைக்கப்படுவிட்டது. புலிகள் இயக்கத்தின் அழிவே தமிழர்களுக்கான தீர்வாகும். எனவே தமிழ்ர்கள் இனி மூச்சுக்காட்டக் கூடாது" என்ற சாரப்பட தன் இனவாதச் சுதியின் தொனியை உச்சஸ்தாயில் பாடியிருக்கிறார். இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் எள்ளளவும் புரிதல் இல்லாத ஒருவரால் தான் இப்படிக் கொக்கரிக்க முடியும்.

இலங்கையில் பல தசாப்தங்களாக நீடித்த இனப்பிரச்சனையின் விளைவுகளில் ஒன்றாகவே , புலிகள் உள்ளிட்ட தமிழ்ப் போராளிக்குழுக்கள் தோன்றினவே தவிர, இந்தப் போராளிகள் மட்டுமே இனப்பிரச்சினைக்கான மூலகாரணிகள் அல்லர். சிங்கள மக்களுக்கு வேண்டுமானால் புலிகள் அழிக்கப்பட்டதோடு, அவர்களுக்கு தமிழர்களால் வந்ததாகச் சொல்லப்படும் பிரச்சினைகள் இல்லாமல் போயிருக்கலாம். ஆனால் தமிழர்களுக்கு முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர் தான் இன்னும் பிரச்சினைகள் அதிகரித்தனவே தவிர, தீர்ந்து போய்விடவில்லை. இன்னும் சொல்லப்போனால் முள்ளி வாய்க்காலுக்குப் பின்னரே காணாமல் போனோர் விவகாரமும், பெண்தலைமைத்துவக் குடும்பங்களும், படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களும் தமிழர்களிடத்தே பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது.

இனவாதம் பேச வேண்டுமென்பதற்காக வாய்க்கு வந்ததையெல்லாம் வாந்தி எடுப்பதும், அதை அனுமதிப்பதும் ஒரு அரசுக்குப் பெருமை சேர்க்கும் விடயமல்ல. இப்படி இனவாதம் கக்கும் அமைப்புக்களை 2015 க்கு முன்னர், மஹிந்த அரசு அனுமதியளித்தன் விளைவாகவே, அசைக்கவே முடியாத அவரது ஆட்சியை, அவரது அப்பத்தை தின்று வளர்ந்த மைத்திரியால் வீழ்த்த முடிந்தது. வரலாறு ஒருமுறை தான் பாடம் எடுக்கும். அந்தப் பாடத்தைச் சரிவரக் கற்றுக்கொள்ளாமல் சரிந்த இராச்சியங்கள் பல. கோத்தாபய வரலாற்றில் இருந்து பாடத்தைச் சரியாகப் படிக்காவிட்டால், மஹிந்தவின் வீழ்ச்சிக்கால வரலாறு திரும்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



# ஜெனீவா சமர் பெப். 24இல்

கொழும்பு, ஜன. 3

சர்வதேச தளத்தில் இராஜதந்திர சமர் என்று கருதப்படுகின்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 43 ஆவது கூட்டத்தொடர் சுவிஸ் தலைநகரான ஜெனீவாவில் எதிர்வரும் பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

மார்ச் 22ஆம் திகதிவரை நடைபெறும் மாநாட்டில் அங்கத்துவ நாடுகளின் மனித உரிமை நிலைவரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளதுடன், மனித உரிமை ஆணையாளரின் வருடாந்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இலங்கை அரசின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் தலைமையில் உயர்மட்டக் குழு பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், அரச சார்பற்ற அமைப்புகளால் நடத்தப்படும் உப மாநாடுகளில் பங்கேற்பதற்கு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும், சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்களும் இம்முறையும் ஜெனீவா செல்வார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு கடந்த காலங்களில் தொடர்ச்சியாக கால அவகாசம் வழங்கப்பட்டது.

'இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பில் பிரிட்டன், கனடா, ஜேர்மனி, மசிடோனியா, மொன்ரனிக்கோ ஆகிய நாடுகள் இணைந்து கடந்த கூட்டத் தொடரில் முன்வைத்த கூட்டு பிரேரணைக்கு இலங்கையும் இணை அனுசரணை வழங்கியது. 2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில், நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கை அரசுக்கு, மேலும் இரண்டு ஆண்டுகள் (2019 - 2021) கால அவகாசம் வழங்கப்பட்டது.

இலங்கையை தொடர்ச்சியாக கண்காணித்து 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடக்கவுள்ள சபையின் 43 ஆவது கூட்டத்தொடரில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்த மேற்படி தீர்மானத்தில், 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம், விரிவான அறிக்கையை முன்வைக்குமாறும் வலியுறுத்தப்பட்டிருந்தது. ஜெனீவாவில் வழங்கிய வாக்குறுதியை இலங்கையின் முன்னைய அரசு உரிய வகையில் நிறைவேற்றவில்லை எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

தற்போது ஆட்சிமாற்றம் ஏற்பட்டு புதிய அரசு பதவியேற்றுள்ள நிலையில், ஜெனீவாத் தீர்மானத்தை ஏற்கப்போவதில்லை என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோர் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

ஜெனீவா தொடர்பில் இலங்கைக்கு இம்முறை கடும் இராஜதந்திர நெருக்கடி ஏற்படலாம் என்றும், நெருக்கடியை சமாளிப்பதற்காக கொழும்பு புது வியூகத்தைகூட கையாளலாம் என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ஒ.5,44)

## சீனா கட்டிய அணையில் நீர்க்கசிவு!

கொழும்பு, ஜன. 3

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைத்த மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் பிரதான அணையில் கசிவு ஏற்பட்டுள்ளது.

பல நாள்களாக தண்ணீர் தொடர்ந்து கசிந்து வருகின்ற நிலையில், சீனப் பொறியியலாளர்கள் கசிவைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ளனர்.

அணையில் இருந்து கசிவு ஏற்பட்டுள்ளது. ஆனால் அது தீவிரமாக இல்லை என்று களுகங்கையின் நீர்த்தேக்க திட்ட பொறியாளர் பி.பி. விஜேரத்ன தெரிவித்தார்.

இது தீவிரமான கசிவு அல்ல, நீர் மட்டம் அதன் அதிகபட்ச திறனை எட்டும் போது இது போன்ற கசிவு சாத்தியமாகும். நீர்த்தேக்கத்தின் பராமரிப்பு மற்றும் மேற்பார்வை இன்னும் சீன நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது 15 மாதங்களுக்கு தொடரும். பின்னர் இது உள்ளூர் பொறியியலாளர்களிடம் ஒப்படைக்கப்படும்.

இதனால் ஆபத்து எதுவும் இல்லை. அணைகளில் கசியும் இந்த இயல்பு ஒரு சாதாரண நிலை. இருப்பினும் நாங்கள் கசிவைத் தடுக்க சீன நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறோம் என்று பொறியியலாளர் விஜேரத்ன தெரிவித்தார். (ஒ.5)

## வலுவடைந்தது ரூபாவின் பெறுமதி

2019ஆம் ஆண்டில் அமெரிக்க டொலருக்கு நிகராக ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. ரூபாவின் பெறுமதி 0.8 சதவீதத்தால் அமெரிக்க டொலருக்கு நிகராக கடந்த ஆண்டில் வலுவடைந்துள்ளதாகவும் மத்திய வங்கி கூறியுள்ளது.

யூரோவுக்கு நிகராக 3.7 சதவீதம் ரூபா வலுவடைந்துள்ளதுடன், 2.7 சதவீதம் இந்திய ரூபாவுக்கு நிகராகவும் வலுவடைந்துள்ளது. ஸ்ரேலிங் பவுண்ட்ஸுக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 1.6 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. ஜப்பான் யென்னுக்கு நிகராகவும் 0.1 சதவீதத்தால் ரூபா வீழ்ச்சி கண்டுள்ளது.


டிசெம்பர் மாதத்தின் இறுதிவாரத்தில் அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி ரூ. 179.39 சதமாகவும், விற்பனை பெறுமதி ரூ. 183.06 சத வீதமாகவும் காணப்பட்டது. 2018ஆம் ஆண்டில் சராசரி அமெரிக்க டொலரின் மதிப்பு 181.57 ரூபாவாக காணப்பட்டது. (ஒ.5,24)

டெங்கு விழிப்புணர்வு

டெங்கு நுளம்புகள் காலை 6-8 மணிக்குள்ளும் மாலையில் 4-6 மணிக்குள்ளும் வீட்டுக்குள் வரக்கூடிய வாய்ப்புள்ளதால் இந்நேரங்களில் யன்னல்கள், கதவுகளைப் பூட்டி வைப்பது மிகவும் சிறந்தது.

சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு.

# மொழி எனும் ஆயுதம்



ந.திஸ்னாகுமாரி,
மூன்றாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ் பல்கலைக்கழகம்.


எண்ணத்தின் வடிவமாகவும் நாகரிகத்தின் சின்னமாகவும் பண்பாட்டின் பிரதிபலிப்பாகவும் திகழ்வது மொழியே. சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் சமுதாய இணைப்புக்கும் துணைநிற்கும் மொழியானது தனி மனிதனை சமுதாயத்தோடு பிணைக்கும் கருவியாகவும், கருத்துப்பரிமாற்ற ஊடகமாகவும் திகழ்கின்றது. சக்தி வாய்ந்த மொழியைப் படைத்துப் பயன்படுத்தும் மனிதஅறிவு, மனம் ஆகியவற்றின் செயற்றிறனையும் ஆற்றலையும் நினைக்கையில் ஆச்சரியமேற்படுகின்றது.

மொழித்தோற்றம் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகளின் முடிவாக அவ்வப்போது எடுத்துரைக்கப்பட்ட கொள்கைகள் யாவும் வெறும் கற்பனையாகவே நீடிக்கின்றன. மொழி என்பது மனிதனின் அறிவுநிலைப்பட்டுள்ளதை அடையாளப்படுத்துகின்றது. அதேபோன்று அறிவுநிலையின் மூலமாக மொழியும் அடையாளப்படுகின்றது.

மனிதன் தொடர்பாடும் ஒரு விலங்கு. இவ்வகையில் மனிதன் எப்போதும் குழுவாகவேவாழவேவிரும்புகின்றான். அந்நிலையில் அவனுக்குப் பிறருடன் தொடர்பாடும் அவசியம் ஏற்படுகின்றது. அவனது விருப்பு, வெறுப்புக்களையும் எண்ணங்களையும் தெரிவித்து அதற்கேற்பவே செயற்பட முனைகின்றான். இந்நிலையில் தான் அவன் தொடர்பாடலுக்காகத் தனது மொழியைப் பிரயோகிக்கின்றான். முதலில் பேச்சுவழக்கும் அடுத்ததாக எழுத்து வழக்கும் தோன்றி, காலத்தின் தேவைக்கேற்பபின்பற்றப்படுகின்றன. இவ்வகையில் நோக்கின் குறித்த ஒரு சமூகத்தின் பிரதிநிதித்துவத்துக்கு மொழியின் பயன்பாடு இன்றியமையாததாகின்றது. மொழியற்ற சமூகமொன்றை இக்காலகட்டத்தில் நாம் எள்ளளவும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

தொடர்பாடல் எனும் செயற்பாட்டின் அடிப்படைத் தூண்டுகோல் மொழியே ஆகும். தமது எண்ணக்கருக்களை வெளிப்படுத்தி பிறரின் கருத்துக்களை செவிமடுத்து மனிதன் ஒரு சீரிய வாழ்க்கையை நுகர்வதற்கு மொழியின் துணை இன்றியமையாததாகின்றது. அவன் தொடர்பாடும் போது தான் அவனது உள்ளக்கிடக்கைகள் வெளிக்கொணரப்படுகின்றன. மனிதன் தன் கருத்தை அறிவிக்க, தொடர்பாடல் கொள்ள, மொழியே உறுதுணையாக அமைகின்றது என்பதை நாம் இதிலிருந்து தெளிவாகக் கண்டு கொள்ள முடிகின்றது. அந்தவகையில் மனிதனின் உணர்வுகளை வெளிப்படுத்தும் மொழி, அவனைப் பல்வேறு படைப்புக்களை படைக்கவைக்கும் உருவாக்க சக்தியாகின்றது. மனித உள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியே மொழி. எனவே மொழியும் தொடர்பாடலும் இன்றியமையாத இரு அம்சங்கள் எனக்கூறிக்கொள்ளலாம்.

இன்றைய கால கட்டத்தில் ஒருநாட்டில் ஒரு மொழியை மட்டும் பேசும் மக்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். அந்தவகையில் பல்லின மக்கள் வாழும் நாடுகளில் பல்லின மொழிப் பயன்பாடானது பன்முகத்தன்மையையும், அபிவிருத்தியையும் மேலோங்கச் செய்வதில் பங்களிப்பாற்றுகின்றன. இலங்கையை எடுத்துக்கொண்டால் அரச கரும மொழியாக சிங்களமும், தமிழும் பொதுச்சிறப்புமொழியாக ஆங்கிலமும் திகழ்கின்றன.



இன்றைய நிலையின்படி இலங்கையில் ஏதோவோர் அடிப்படையில் இலங்கையர் தமது தாய்மொழிக்கு மேலதிகமாக தமிழராயின் சிங்களத்தையோ, ஆங்கிலத்தையோ இன்னொரு மொழியினைக் கற்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது.

இது ஒருவகையில் நாட்டில் இனத்துவ ரீதியான ஒன்றிணைப்புக்கு வழி வகுத்தாலும், இன்னொரு வகையில் மொழியின் தனித்துவத்துக்கு தடையாகவும் அமையக்கூடும்.

இன்றைய நிலையில் ஒருவர் எவ்வளவுதான் படித்துப் பாண்டித்தியம் பெற்றிருந்தாலும் தம்நாட்டில் பயன்பாட்டில் உள்ள பிறமொழிகளையும் அறிந்திருக்கவேண்டும். இன்றைய இலங்கையில் "நான் சிங்களவன். எனவே சிங்கள மொழியை மட்டும்தான் பேசுவேன் ,எழுதுவேன்" என்றோ, "நான் தமிழன். தமிழ் மொழியைமட்டுமேஅறிந்திருப்பேன்" என்றோ இருக்கும் பட்சத்தில் சில காரியங்களை ஆற்றுவதிலும், இன நல்லிணக்கத்தோடு வாழ்வதிலும் தடங்கல்கள் ஏற்படக்கூடும். அப்படியென்றால் அவர் தன் சமூகம் சார்ந்து குறித்த வட்டத்துக்குள் மாத்திரம் நின்றே செயற்படமுடியும்.

மொழி என்ற சிறந்த உயர்ந்த வளத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கு ஆரம்பத்தளமாக அமைவது பாடசாலைகளே. பாடசாலை என்ற அம்சத்தின் இதயமாக அமைவன வகுப்பறைகளே. இத்தகைய வகுப்பறைகளில் சிறுவயது முதலே மாணவர்களுக்கு மொழியறிவைப் புகட்டவேண்டும். இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பும் நோக்குடன் மொழி விருத்திக்கும், மும்மொழி இலங்கை எனும் வேலைத்திட்டம் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. பாடசாலை களில் ஆரம்ப வகுப்புக்களில் கற்கும் மாணவர்களை அடிப்படையாகக் கொண்டமைந்த இந்த வேலைத் திட்டத்தின் ஊடாகவே மொழிவிருத்தியையும் உச்சரிப்பையும் மேம்படுத்த முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இளமையிலிருந்தே மொழியறிவை விருத்திசெய்தல், சரியான பேச்சு மற்றும் உச்சரிப்பை ஏற்படுத்தல், ஒருவரில் ஒருவர் இணக்கப்பாடு மற்றும் சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்புதல், கருத்துப் பரிமாற்றம் ஊடாக பல்லினக் கலாசாரத்துக்கு மதிப்பளிக்கத் தூண்டுதல், பரந்த அறிவைப் பெற்றுக் கொள்ள மும்மொழித் தேர்ச்சியைப் பயன்படுத்தல், தேசிய உணர்வை ஏற்றுக் கொண்டு வெளிப்படுத்தல் போன்ற குறிக்கோள்களை முதன்மைப்படுத்தி இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இளமையில் கல்வி சிலைமேல் என்பது ஔவையின் வாக்கு. இளவயதிலேயே பிறமொழிகளை உள்வாங்கிக் கொண்டால், தாய்மொழி தவிர்ந்த ஏனைய மொழிகளும் சரளமாகப் பேசும், எழுதும் ஆற்றல் வாய்க்கப் பெற்றுவிடும்.

பிறமொழி அறிவுபெறும் பட்சத்தில் இலங்கையில் உள்ள அனைவரும் எந்தவோர் செல்வதற்கோ, வாழ்வதற்கோ, தொழில் பெறுவதில் சிரமங்களுக்கோ முகங்கொடுக்க வேண்டிய அவசியமேற்படாது.

**மொழி என்ற சிறந்த உயர்ந்த வளத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கு ஆரம்பத்தளமாக அமைவது பாடசாலைகளே. பாடசாலை என்ற அம்சத்தின் இதயமாக அமைவன வகுப்பறைகளே. இத்தகைய வகுப்பறைகளில் சிறுவயது முதலே மாணவர்களுக்கு மொழியறிவைப்பு கட்டவேண்டும். இலங்கையில் தேசிய ஒருமைப் பாட்டைக் கட்டியெ ழுப்பும் நோக்குடன் மொழி விருத்திக்கும், மும்மொழி இலங்கை எனும் வேலைத்திட்டம் பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தது.**



# வவுனியா ஆலய கஜமுக சங்காரம்





*வவுனியா,ஜன.3*

வவுனியா ஆதி விநாயகர் ஆலயத்தில் கஜமுக சங்காரம் நேற்று முன்தினம் மாலை சிறப்பாக இடம்பெற்றது.

இந்துக்களின் சிறப்பு விரதங்களில் ஒன்றான பிள்ளையார் பெருங்கதையின் 21 ஆம் நாளான நேற்றுமுன்தினம், வவுனியா, வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்தில் ஆலய பிரதமகுரு சஞ்சீவ காந்த குருக்கள் தலைமையில் சிறப்பு அபிஷேகம், பூஜை வழிபாடுகள் இடம்பெற்று விநாயகப் பெருமான் உள் வீதி,வெளிவீதி வலம் வந்து காட்சி கொடுத்தார்.

மேளதாள வாத்தியங்கள், மயிலாட்டம், குதிரையாட்டம் என்பவற்றுக்கு மத்தியில் கஜமுக சங்காரம் சிறப்பாக இடம்பெற்றது. (ஐ-ரி4)

# ஒருங்கிணைப்புக் கூட்டத்தை புறக்கணித்தது கூட்டமைப்பு

*யாழ்ப்பாணம், ஜன.03*

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசாவும் குறித்த செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேச சபைகளின் தவிசாளர்களும் புறக்கணித்து , வெளிநடப்புச் செய்துள்ளனர்.

“உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்குள் உள்வாங்க முடியாது என்று கூறப்பட்டமையால் புறக்கணித்தோம்” என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த இரண்டு செயலகங்களினதும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் கடந்த வாரம் நடைபெற்றன.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினருக்கும் தவிசாளர்களுக்கும் மாத்திரமே இந்தமுறை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அழைப்புவிடுக்கப்பட்டிருக்கவில்லை. “2018ஆம் ஆண்டு 8ஆம் மாத சுற்றறிக்கையின்படி உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை அழைக்கத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளதாக எமக்குக் காரணம் கூறினர். எனினும், அந்தச் சுற்றறிக்கை வந்தபின்னரும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றபோது, உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

புதிய அரசிலேயே உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்” என்று தவிசாளர்கள் சுட்டிக்காட்டினர்.

குறித்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி.றூபவதி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, “இது பற்றிய சுற்றறிக்கையை ஆராய்ந்தே இந்தச் சிக்கலுக்குப் பதிலளிக்க முடியும்.

இருப்பினும் இந்த விடயம் குறித்து பிரதேச செயலர்களின் பதில்களையும் பெற்றபின்னர் விளக்கம் கூறுகின்றேன்.” என்று தெரிவித்தார்.

எனினும், ஏனைய பிரதேச செயலர்களிடம் இது பற்றிக் கேட்டபோது அத்தகைய சுற்றறிக்கை தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவித்தனர். (த-105)

# வீதிச் சீரமைப்பு ஆரம்பம்

*கிளிநொச்சி, ஜன.3*

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வண்ணக்கேணி பிரதான வீதியின் சீரமைப்பு நடவடிக்கைகள் பிரதேச சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சமூக வலுவூட்டல் வேலைத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட 50 இலட்சம் ரூபா நிதியிலேயே இந்த வீதி சீரமைக்கப்படவுள்ளது.

அந்தப் பகுதி மக்கள் தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த வீதி சீரமைக்கப்படுகின்றது என்று பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன் தெரிவித்தார். (எ-6)

# படைகளின் பிரதானியாக விரைவில் சுமேத பெரேரா

*கொழும்பு, ஜன. 3*

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா விரைவில் நியமிக்கப்படவுள்ளார்.

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக இருந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன கடந்த 31ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றமையை அடுத்து, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வாவை, பதில் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக நியமித்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ.

இந்த நிலையில், பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானிக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் வகையில், சட்டத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

இந்தத் திருத்தம் செய்யப்பட்ட பின்னர், விரைவில் மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா, பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக நியமிக்கப்படுவார்.

போரில் முக்கிய பங்காற்றிய மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா, இராணுவத் தலைமை அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# அபிவிருத்தி அவசியம்

## முல்லை. ஒருங்கிணைப்புக் குழு தலைவர் தெரிவிப்பு



*கொழும்பு, ஜன.3*

வடக்கின் அபிவிருத்தியில் ஒன்றுதான் அம்மாச்சி உணவகம். எமக்குத் தற்போது அபிவிருத்தி அவசியம். அபிவிருத்தியில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ச.கனகரத்தினம் தெரிவித்தார்.

நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற அம்மாச்சி உணவகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. முல்லைத்தீவு மாவட்டத்தை அபிவிருத்தி செய்யும் வாய்ப்பை இந்த அரசு தந்துள்ளது.

நடுத்தர மக்களுக்குக் குறைந்த செலவில் உணவுகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்க அம்மாச்சி உணவகம் பயன்படும். மருந்து விசிறாத பதார்த்தங்களைக் கொண்டு தரமான உணவுகள் வழங்கப்படுகின்றன.

விவசாயப் பயிற்சி வழங்குவதற்கான நிலையம் ஒன்றை மல்லாவியில் உருவாக்கியுள்ளனர். அது துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய இடங்களில் உள்ள விவசாய மக்களுக்கு உதவுகின்றது-என்றார். (எ-ரி3)

# ‘ஸ்மார்ட்’ இளையோரின் தரவுகள் சேகரிப்பு

*சாவகச்சேரி, ஜன.3*

தென்மராட்சிப் பிரதேசத்தின் உள்ள கிராமங்களில் படித்த மற்றும் தொழில் நுட்ப அறிவுடையவர்கள் பற்றிய விவரங்களைத் திரட்ட கிராமத்துக்கு இருவர் வீதம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் திரட்டப்படவுள்ள இந்தத் தரவுகளைச் சேகரிப்பதற்கு “ஸ்மார்ட் சிறிலங்கா” ஓர் ஆண், ஒரு பெண் என இருவர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்பப் படிவங்கள் கிராம அலுவலகர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதற்காக 18 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்ட கணினி அறிவுள்ள “ஸ்மார்ட்” அலைபேசி வைத்திருப்பவர்களிடம் இருந்து இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 138 கிராமங்களில் இருந்து ஓர் ஆண், ஒரு பெண் என 276 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கிராமத்தில் பிடித்த மற்றும் தொழில்நுட்ப அறிவு உள்ளவர்களுக்குத் தகைமைக்கேற்ப வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# மரநடுகை

2020 ஆம் ஆண்டிற்கான அரச வேலையின் தொடக்க நாளில் மரநடுகை நிகழ்வு ஜே/203 ஏழாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பிரிவு சமுர்த்திப் பிரிவினரும் மயிலங்காடு இளைஞர் நற்பணி மன்றத்தினரும்இணைந்து யாழ்ப்பாணம் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயத்தின் மைதானச் சூழலில் மருத மரக்கன்றுகளை நடுகை செய்தனர். (ஐ-39)





# காற்றோடு பறக்கும் உறுதிமொழி

## கவலைப்படுகிறார் ஜனாதிபதியின் செயலர்

**கொழும்பு, ஜன. 3**

**அரச பணியாளர்கள் இன்று எடுத்துக்கொண்ட உறுதிமொழி வழமையாக இடம்பெறும் ஒரு சம்பிரதாயபூர்வமான நிகழ்வாக இருந்து விடக்கூடாதென்பதே எனது எதிர்பார்ப்பாகும். பல வருடங்களாக ஜனவரி முதலாம் திகதி நாம் இத்தகையதொரு உறுதிமொழியை எடுத்துக்கொள்கின்ற மரபைக் கொண்டிருக்கின்றோம். எஞ்சிய 364 நாள்களும் பெரும்பாலும் நாம் இந்த உறுதிமொழியிலிருந்து விலகியிருப்பதுதான் அரச சேவையை மக்கள் மதிக்காதிருப்பதற்கு காரணமாகும், இவ்வாறு ஜனாதிபதியின் செயலர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர தெரிவித்தார்.**

ஜனாதிபதி செயலகத்தின் ஊழியர்கள் புத்தாண்டில் கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனைத்து அரசுகளின் மீதும் மக்கள் தமது வெறுப்பை வெளிப்படுத்துவதற்கும் இந்த நிறுவனங்களுக்கு மக்கள் மதிப்பளிக்காதிருப்பதற்கும் காரணம் ஜனாதிபதியின் செயலர் முதல் அலுவலக ஊழியர் வரையுள்ள முழு அரச சேவையிலும் மக்களுக்கான சேவைகள் உரிய முறையில் நிறைவேற்றப்படாதிருப்பதேயாகும். அந்த வெறுப்பை இல்லாது செய்யும் வகையில் எமது பொறுப்புக்களையும் எமது பணிகளையும் நிறைவேற்ற வேண்டும்.

எமக்கு கிடைத்திருக்கும் தகவல்களுக்கேற்ப 15 இலட்சம் பேர் கொண்ட அரச ஊழியர்களுக்காக சுமார் ஒரு டிரில்லியன் ரூபா வரையில் பெருமளவு நிதி செலவிடப்படுகின்றது. அரச சேவைக்கு செலவு செய்வதில் பிரச்சினையில்லை. எனினும் அதன் மூலம் கிடைக்கும் பெறுபேறுகள் அதனைப் பார்க்கிலும் ஐந்து, ஆறு மடங்குகளாக இருக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். நாம் வெளியிடுகின்ற சுற்றறிக்கைகளின் செய்திகள் எமக்குக் கீழிருக்கும் எம்முடன் கடமையாற்றும் அனைவருக்கும் கிடைப்பதில்லை என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். ஜனாதிபதி அவ்வாறு கூறியதிலிருந்து எவ்வளவுதான் சுற்றறிக்கைகளை அனுப்பினாலும் சில வேளை அலுவலகத்திலுள்ள அனைவரையும் அந்த செய்தி சென்றடைவதில்லை என நான் விளங்கிக்கொண்டேன்.

இன்று நாட்டுக்கு கிடைத்துள்ள தலைமைத்துவம் மிக சிறப்பானதாகும். ஜனாதிபதியும் ஓர் அரச ஊழியர். அவர் அதனை மிகுந்த பெருமிதத்துடன் கூறுபவர்.

கடந்த நாற்பது நாள்களுக்குள் அவர் நிறைவேற்றியுள்ள கடமைகளும் அதற்காக அவர் எம்மை வழிநடத்திய விதமும் மிகுந்த பாராட்டுக்குரியதாகும். நான் அறிந்தவகையில் கடந்த நாற்பது வருடங்களின் பின்னர் இந்த நாட்டில் அமைக்கப்பட்ட மிகச் சிறிய அமைச்சரவையை உருவாக்குவதற்கு அவர் பக்கபலமாக இருந்த்தோடு, அதற்கான தலைமைத்துவத்தையும் வழங்கினார். மேலும் அமைச்சுக்களை வகைப்படுத்தும்போது நடைமுறைச் சாத்தியமான வகையில் விஞ்ஞான அடிப்படையில் அமைச்சுக்களின் விடயப் பரப்புகளை அவர் தயாரித்த விதத்தைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு அவர் எந்தளவு வினைத்திறனுடனும் பயனுள்ள வகையிலும் சிறிய அமைச்சரவையை அமைப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது.

ஒரு நாட்டில் அரச சேவையாளர்கள், பொதுமக்களுக்கு சுமையாக அமைந்துவிடக்கூடாது. அரச சேவையின் சட்டதிட்டங்களும் சுற்றறிக்கைகளும் இயன்றளவு இலகுபடுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி தெரிவிக்கின்றார். அது பண செலவின்றி மேற்கொள்ளக் கூடிய பணியாகும். எவ்வித ஆலோசனைகளும் தேவையில்லை. மிகச் சரளமாக பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் அரச சேவை மாற்றியமைக்கப்படல் வேண்டுமென்பதே அவரது செய்தியாகும். நாட்டில் வரி முறைமை, வங்கிகள் மற்றும் நிதி, நிறுவன முறைமைகள், அரச திணைக்களங்கள், அதிகார சபைகள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் இதனை விட சரளமாக, இலகுவான நடைமுறைகளை பின்பற்ற வேண்டுமென ஜனாதிபதி நம்புகின்றார்- என்றார். (ஒ.5)

# புதுவருடத்தில் 6 பேர் பாதிப்பு

சாவகச்சேரி, ஜன. 3

புதுவருடதினத்தன்று வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்ட 6 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்

இதில் வீதி விபத்துக்களில் சிக்கி இருவரும், தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த இருவரும், நச்சுத்திரவம் அருந்திய நிலையில் இருவருமாக ஆறுபேர் பாதிக்கப்பட்டனர்.

இவர்கள் 6 பேரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் மட்டுவில், கெற்பேலி, வரணி ஆகிய பகுதியில் இடம்பெற்றன. (ஐ-9)



# இனியபாரதிக்கு மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, ஜன. 03

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இனியபாரதி என அழைக்கப்படும் குமாரசாமி புஸ்பகுமாரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை - திருக்கோவில், அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களில் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை 7 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் ஆகிய இடங்களில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய, இனியபாரதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் , அக்கரைப்பற்று மேலதிக நீதிவான் பி. சிவகுமார் முன்னிலையில் இனியபாரதி நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது எதிர்வரும் 9ஆம் திகதி வரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

# விபத்தை ஏற்படுத்திய சாரதிக்கு மறியல்

சாவகச்சேரி, ஜன. 3

நாவற்குழிப்பாலத்துக்கு அண்மையில் விபத்தை ஏற்படுத்தி ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆறுபேரைக் காயப்படுத்திய டிப்பர் வாகனச் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

நேற்றுமுதினம் மாலை இந்த விபத்து நடந்தது. வீதியில் முந்திச் செல்ல முயன்ற டிப்பர் வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும், ஓட்டோச் சாரதி உட்பட மூவரும் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரிப் பொலிஸார் டிப்பர் வாகனச் சாரதியைக் கைது செய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் சாரதியை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-9)

# தன்னாட்சியே தமிழருக்குத் தேவை

## சொல்கிறார் விக்னேஸ்வரன்



முல்லைத்தீவு, ஜன. 3

“மற்றவர்களையோ அரசையோநம்பமுடியாதுள்ளது. எங்கள் வாழ்வு வளம்பெற வேண்டும் என்றால் எமக்குத் தன்னாட்சி கிடைக்க வேண்டும். தற்சார்புடன் கடமைகளில் ஈடுபடவேண்டும். அவ்வாறு செய்வதால் தன்னிறைவு பெறமுடியும்” என்றும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு உடையார்கட்டில் 300 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினர் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களை நாங்களே வளப்படுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது. நாங்கள் எங்களை நம்பிக்கொள்ளலாம். எங்களை வளப்படுத்தலாம், முன்னேற்றலாம்.

தமிழ் மக்கள் கூட்டணி தங்களின் குறிக்கோளாக மூன்று விடயங்களை எடுத்துள்ளது தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு என்ற மூன்று, அரசியல் ரீதியாக தன்னாட்சியே இப்போதைய தேவையாக உள்ளது. அதற்காக போராடிக்கொண்டு வருகின்றோம். அரசியலுக்கு அப்பால் மக்களின் வாழ்வை நிறைந்த வாழ்வாக மாற்றுவதானால், முக்கியமான தகைமை இருக்கவேண்டும் அதில் தற்சார்பு முக்கியம் மற்றவர்களின் கையினை எதிர்பார்க்காது எங்களை நாங்களே வளப்படுத்தக்கூடிய ஒரு நிலை தற்சார்பு.

எங்களை நாங்களே சார்ந்திருந்து எமக்கான உதவிகளை நாங்களே ஏற்படுத்தவேண்டும். வெளிநாடுகளில் இருக்கின்ற எங்கள் உறவுகளிடம் இருந்தும் உதவிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். என்று தெரிவித்துள்ளார். (கு-ரி3)

# கோத்தா, மஹிந்தவுடன் மோடி தொலைபேசியில் பேச்சு



**கொழும்பு, ஜன. 3**
**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுடனும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுமுன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.**

2020 புத்தாண்டை முன்னிட்டு வாழ்த்துக் கூறுவதற்காக இலங்கைத் தலைவர்கள் மற்றும் பூட்டான், நேபாளம், மாலைதீவு, பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கும் இந்தியப் பிரதமர் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டிருந்தார்.

தொலைபேசி உரையாடலின் போது, இந்தியப் பிரதமர் மோடியும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவும், 2020 ஆம் ஆண்டில் நட்புறவுகளை மேம்படுத்துவதில் நெருக்கமாக இணைந்து பணியாற்றுவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கையுடன் நெருக்கமான மற்றும் விரிவான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். (ஒ.5)

# கோத்தாவை அழைக்கும் சீனா


*14,15 இல் பயணம்*

கொழும்பு, ஜன. 3
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் சீனாவுக்கு முதலாவது அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் அழைப்பை ஏற்று, ஜனாதிபதி இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். முன்னதாக ஜனவரி மாதம் முதல் வாரம், ஜனாதிபதி பயணத்தை மேற்கொள்வதற்கு பீஜிங் பரிந்துரைத்திருந்தது என்றும், பின்னர் மீளாய்வு செய்யப்பட்டு, 14, 15ஆம் திகதிகளில் பயணத்தை மேற்கொள்வதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
நவம்பர் மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் கோத்தாபய ராஜபக் ஷ மேற்கொள்ளவுள்ள இரண்டாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.
அவர் நவம்பர் 28 தொடக்கம் 30 வரை இந்தியாவில் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# இந்திய வங்கிகளுக்கு இலங்கையில் மூடுவிழா

கொழும்பு, ஜன. 3
இரண்டு இந்திய வங்கிகள் இலங்கையில் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளவுள்ளன. அக்சிஸ் வங்கி மற்றும் ஐசிஐசிஐ வங்கி ஆகியனவே இலங்கையில் உள்ள தமது கிளைகளை மூடவுள்ளன.
இந்த இரண்டு வங்கிகளும் தமது நிதி நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வதற்கு, மத்திய வங்கி அனுமதி அளித்துள்ளது.
தாய் வங்கிகளிடமிருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டது. வங்கிகளின் செயற்பாடுகளை முடித்துக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், இந்த வங்கிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிகள் இல்லாமல் செய்யப்படும். பொதுமக்களிடமிருந்து வைப்புத்தொகையை ஏற்றுக் கொள்வது உட்பட வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இரண்டு வங்கிகளும் இனி அனுமதிக்கப்படமாட்டா. (ஒ.5)







நல்லூர் சிவன் கோவில் என்று அழைக்கப்படும் ஸ்ரீ கமலாம்பிகை சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தான திருவெம்பாவை பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 7 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 10ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும், 11 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.
படங்கள் - ஐ.சிவசாந்தன்

# இன்றும், நாளையும் மின்தடை

யாழ்ப்பாணம்,ஜன.3
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் அளவெட்டி வடக்கு,பொன்மலர், பன்னாலை ஆகிய இடங்களிலும் வவுனியா மாவட்டத்தில் கூமாங்குளம் கிராமம், அவுசதப்பிட்டிய கிராமம்,பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம் ஊடாக செட்டிகுளம் வரை, பட்டாணிச்சூரிலிருந்து பிரமணாளங்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து செட்டிகுளம் வரை, சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா பல்கலைக்கழகம்,பறயனாளங்குளத்திலிருந்து முகத்தான்குளம் வரை, ஈரப்பெரியகுளத்திலிருந்து பூஓயா வரை, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், பூ ஓயா இராணுவ முகாம், ஆகிய இடங்களிலும், மன்னார் மாவட்டத்தில் முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், சிலாவத்துறை கடற்படைமுகாம், முள்ளிக்குளம் கடற்படைமுகாம், பறயனாலங்குளம், பெரிய குஞ்சுக்குளம், பெரியமுறிப்பு, திக்கம், மடுச்சந்தி, கட்டையடம்பன்,மழவராயர் கட்டையடம்பன், தம்பனிக்குளம், பண்ணைவெட்டுவான், இசைமழைத்தாழ்வு, கற்கிடந்தகுளம், நீராவிபுரம், செட்டியார் கட்டையடம்பன், முருங்கன் விதைகள் உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை நாளை சனிக்கிழமை காலை 8 மணியில் இருந்து மாலை 5.30 மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் உரும்பிராய், கைதடி வடக்கு, நவபுரம், பிறவுண் வீதி, அரசடி வீதி புகையிரத கடவையிலிருந்து தட்டார் தெரு சந்தி வரை, கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதி ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடி சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி வரை, அசாத் வீதி, வி.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப்புளியடி.கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன் பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, ஹரிகரன் அச்சகம், அண்ணாமலையான் சிறி இராகவேந்திரா என்ரபிறைசஸ் பிறைவேற் லிமிரட், வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பி.எல்.சி, சங்கானை அராலி வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா மாவட்டத்தில் கூமாங்குளம் கிராமம், அவுசதப்பிட்டிய கிராமம், கந்தசாமிநகர், நித்திக்குளம், சண்முகபுரம், கங்கன்குளம், செட்டிகுளம், புளியங்குளம், காந்திநகர், அரசடிகுளம் ஆகிய இடங்களிலும், மன்னார் மாவட்டம் கரைசலிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் மருத்துவமனை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மாசார், சோரன்பற்று, உமையாள்புரம், விளாவோடை இராணுவ முகாம், ஆனந்தபுரத்திலிருந்து முருகண்டி வரை, இரணைமடுச்சந்தி, அறிவியல் நகர், ஆனந்தபுரம் நைற்றா, கிளிநொச்சி மருத்துவமனை, ஸ்ரீலங்கா ரெலிக்கொம், விக்ரமரட்ண பிறைவேட் லிமிட்டட்,மத்திய வங்கி, பொறியியல்பீடம்,விவசாயபீடம்,கார்கில்ஸ், இராணுவ பாசறை ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# 121 பொலிஸார் யாழ்ப்பாணத்துக்கு

*மன்னார்,ஜன.3*

**மன்னார் மாவட்டத்திலிருந்து 121 தமிழ் பொலிஸார் யாழ்ப்பாணத்துக்கு இட மாற்றப்படவுள்ளனர்.**



இவர்களில் போதை தடுப்புப் பிரிவைச் சேர்ந்த நான்கு தமிழ் பொலிஸாரும் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் பணியாற்றிய 300 தமிழ் பொலிஸார் உள்ளக ரீதியாக இடமாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர்.

அதற்கமைவாக மன்னார் மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய 121 தமிழ் பொலிஸார்யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

அதேவேளை இந்த இடமாற்றத்துக்கு ஆட்சேபனை தெரிவித்து பொலிஸார் பலர், பொலிஸ் தலைமையகத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர். சிலர் நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் ஆகியோரின் உதவியையும் நாடியுள்ளனர். (க-213)

## வாக்காளர் இடாப்பு மக்கள் பார்வைக்கு

*மூளாய்,ஜன.3*

வாக்காளர் இடாப்பின் வரைவு பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் வரைவுகள் குறிப்பிட்ட வாக்கெடுப்பு மாவட்டத்தில் உள்ள கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் தொடக்கம் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இந்த வாக்காளர் இடாப்பின் வரைவு தொடர்பாக ஏதாவது ஆட்சேபனைகள், முறைப்பாடுகள் இருப்பின் அது குறித்து முறைப்பாடு செய்யலாம் என்று தேர்தல்கள் அலுவலகம் அறிவித்துள்ளது. (ஐ-121)



## மாணவிக்கு பாராட்டு விழா

*சாவகச்சேரி, ஜன.3*

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவி தங்கராஜா பிரசாந்தினி கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் (புதிய பாடத்திட்டத்தில்) 3 பாடங்களிலும் அதி சிறப்புச் சித்தி பெற்றுள்ளார்.

கல்லூரியின் 145 வருட வரலாற்றில் மாவட்ட நிலையில் முதலிடம்பெற்றுள்ள பிரசாந்தினிக்குக் கல்லூரிச் சமூகத்தால் பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது.

பாராட்டு விழாவுக்கான ஏற்பாடுகளைக் கல்லூரிச் சமூகமும், பழைய மாணவர் சங்கமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன என்று கல்லூரியின் அதிபர் செ.பேரின்பநாதன் தெரிவித்தார். (ஐ-9)

## கம்பிகள் அறுத்த குற்றச்சாட்டில் கைதான சிப்பாய்கள் விடுதலை

*சாவகச்சேரி, ஜன.3*

வீதியோரம் வைக்கப்பட்டிருந்த விளம்பரத் தட்டியின் இரும்புக் கம்பிகளை அறுத்து எடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 9 படைச் சிப்பாய்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய நேற்று சாவகச்சேரி நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டனர்.

2015ஆம் ஆண்டு நாவற்குழி பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்துக்கு முன்பாகக் கடலேரியில் நடப்பட்டிருந்த விளம்பரத் தட்டியின் கம்பிகளைச் சிலர் அறுப்பதை அவதானித்த காவலாளி சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அறிவித்தார். அவர்கள் இரும்புக் கம்பிகளை அறுத்துக் கொண்டிருந்த நாவற்குழிப் படை முகாமைச் சேர்ந்த 9 பேரைக் கைது செய்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

படைச் சிப்பாய்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்குத் தொடர்ந்து நடைபெற்று வந்தநிலையில் படைச் சிப்பாய்கள் 9 பேரையும் வழக்கில் இருந்து விடுவிக்குமாறு கடந்த 28ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது. அதையடுத்து சாவகச்சேரி நீதிமன்று 9 பேரையும் விடுவித்தது. (எ-9)



## மர நடுகை

*சாவகச்சேரி,ஜன.3*

புதுவருட கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் தேசிய மரம் நடுகைத் திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மரக்கன்றுகள் நேற்றுமுன்தினம் நடுகை செய்யப்பட்டன.

பிரதேச செயலர் உள்ளிட்ட அலுவலர்கள் "முன்னேறும் நாட்டுக்கு வளர்கின்ற மரம்" எனும் தொனிப்பொருளில் மரக்கன்றுகளை நடுகை செய்தனர். (ஐ-9)




## ரயில் பயணிகளுக்கு சலுகை மரக்கறி

*கொழும்பு,ஜன.03*

ரயில் பயணிகளுக்கு சலுகை அடிப்படையில்மரக்கறிப்பொதிகளை வழங்க ரயில் சேவைகள் இராஜாங்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய 10 வகையான மரக்கறிகளை சலுகை அடிப்படையில் ரயில் பயணிகள் கொள்வனவு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களில் நேற்று மதியம் 2.00 மணி முதல் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ரயில் சேவைகள் இராஜாங்க அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்க தெரிவித்தார். (அ)



## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

*வவுனியா.ஜன.3*

வவுனியா பூந்தோட்டம் பெரியார்குளம் பகுதியை சேர்ந்த வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் அணியின் ஒழுங்குபடுத்தலில் வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கம் தனது சொந்த நிதியில் இருந்து கற்றல் உபகரணங்களை நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளார். (ஐ-110)

## முதியோருடன் கொண்டாட்டம்

*யாழ்ப்பாணம்.ஜன.3*

புதுவருடத்தை முன்னிட்டு இராணுவத்தினரால் யாழ்ப்பாணத்தில் உள்ள முதியோர் இல்லங்களில் சிறப்பு நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடத்தப்பட்டன.

யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவன் வணிகசூரியவின் ஆலோசனைக்கு அமைவாக நிகழ்வுகள் இடம்பெற்றன.

சிவபூமி முதியோர் இல்லம், அன்னை தெரேசா முதியோர் இல்லம், புத்தூர் புனித லூகாஸ் முதியோர் இல்லம், பரமானந்தா சிறுவர் மற்றும் முதியோர் இல்லம் ஆகியவற்றில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

முதியவர்களுக்கு உணவுகள் வழங்கி, அவர்களை மகிழ்வூட்டும் நிகழ்வுகள் நடைபெற்றன. (க)





## பாத யாத்திரை

*யாழ்ப்பாணம், ஜன.3*

இந்து மக்களின் மிக முக்கிய விரதமான திருவெம்பாவையை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் ஆன்மிக பாத யாத்திரை நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் சம்பில்துறை-சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்திலிருந்து காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் வரை பாதயாத்திரை இடம்பெறவுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு 0773567233 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அகில இலங்கை சைவ மகா சபை அறிவித்துள்ளது. (ஐ)

# கொடிகாமம் கோவிலில் வாள்வெட்டுக் குழு அடாவடி

## பொலிஸ் பாதுகாப்புடனேயே அடிக்கல் நடுகை

*கொடிகாமம், ஜன. 3*

**கோவிலில் அத்திபாரக்கல் நடும்போது வாள்களுடன் சென்ற நால்வர், அங்கு நின்றிருந்த தாய் ஒருவரைத் தள்ளி விட்டு மகனைத் தாக்கியுள்ளனர்.**




தாக்குதலால் அவர் தப்பியோடிய நிலையில், பொலிஸ் பாதுகாப்புடனேயே அத்திபார அடிக்கல் நடுகை இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் பாலாவி வடக்கு கொடிகாமத்தில் அமைந்துள்ள விறுமர் கோவிலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அங்கு எட்டு மாதங்களுக்கு முன்னர் ஈட்டியால் குத்தி ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். அவரின் உறவினர்களுக்கே நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

தாக்குதலில் காயமடைந்தவர் சிறு காயங்களுடன் தப்பிச்சென்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். தள்ளி வீழ்த்தப்பட்டமையால் அவரது தாய் பாதிக்கப்பட்டார். அதன் பின்னர் பொலிஸாரின் உதவியுடன் அத்திபார அடிக்கல் நடுகை நடைபெற்றது என்று அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். விசாரணை இடம் பெறுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(த-159)





# கிளிநொச்சியில் தொங்கு பாலம்

*கிளிநொச்சி.ஜன.3*

கிளிநொச்சி நகரில் காணப்படுகின்ற பசுமைப்பூங்காவில் புதிதாக அமைக்கப்பட்ட தொங்கு பாலம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மக்கள் பாவனைக்காகத் திறந்துவைக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன் இந்தப் பாலத்தைத் திறந்து வைத்தார்.

இதனைப் பார்வையிட்ட மக்கள் போருக்கு முன் சந்திரன் பூங்காவில் இருந்த தொங்கு பாலம் நினைவுக்கு வருவதாகத் தெரிவித்தனர். (ஐ)



தூய்மையானதும், பசுமையானதுமான எமது நாடு எனும் திட்டத்துக்கு அமைய ஜே/106 கிராம அலுவலகர் பிரிவில் சிரமதானப் பணிகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டன. (ஐ)

# 70 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

*யாழ்ப்பாணம்.ஜன.3*

யாழ்ப்பாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் 70 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பினூடாக லண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் நிதி உதவியில் இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரால் மாணவர்களிடம் இவை கையளிக்கப்பட்டன. (ஐ)



# மாணிக்கப் பிள்ளையார் ஆலய நூற்றாண்டுவிழா

*அம்பாறை, ஜன.3*

அம்பாறை ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் ஆலய நூற்றாண்டு விழா வெகு விமரிசையாக நடைபெறவிருக்கின்றது.

பெரும்பான்மைச் சமூகத்தவரின் நகராகத் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் வரித்துக் கொள்ளப்பட்டுள்ள அம்பாறை நகருடன் ஒட்டியதாக அமைந்துள்ள இந்தஆலயம் தமிழ் மக்களுடன் இணைந்து அங்குள்ள பெரும்பான்மைச் சிங்கள மக்களாலும் மதிக்கப்பட்டு வருகின்றது. ஆலய வழிபாடுகளிலும் நம்பிக்கையுடன் அவர்கள் பங்கெடுக்கின்றனர்.

இந்தஆலயத்தின் நீண்ட வரலாற்றைப் பறைசாற்றும் வகையிலான நூற்றாண்டு விழாவை எதிர்வரும் மார்ச் மாதம் வெகு சிறப்பாக நடத்துவதற்கு தற்போதைய ஆலய பரிபாலன சபை தீர்மானித்துள்ளது. இதன்போது. நூற்றாண்டுவிழா மலர் ஒன்றும் வெளியிடவுள்ளது. எனவே இந்த ஆலயத்தின் வரலாற்றுடன் தொடர்புடையவர்கள் ஆலய கும்பாபிஷேக மலர்க் குழு நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

நூற்றாண்டு விழாவின் போதுவெளியிடப்படவுள்ள ஆண்டுமலர் வெளியீட்டின்போது ஆலயத்தின் ஆரம்பகால உறுப்பினர்களின் மதிப்பளிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. ஆலயத்தின் வரலாற்றுடன் தொடர்புடையவர்கள் இடம் பெயர்ந்து வாழ்கின்றனர். இவர்களின் தகவல்களைச் சேகரிப்பதில் ஆலய கும்பாபிஷேக மலர்க் குழுவினர் பல சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

இவ்வாறானவர்கள் தங்கள் சேவைச் சான்றிதழ்களை அல்லது வரலாற்று ரீதியான ஆவணங்களை அல்லது தங்கள் அனுபவ அற்புதங்களை த. கயிலாயபிள்ளை, மலர்க் குழுத் தலைவர், இல. 7/3,நாவலர் வீதி, அக்கரைப்பற்று என்ற விலா சத்துக்கு கடிதம் மூலமாகவோ அல்லது 0773664282 எனும் தொலைபேசி இலக்கத்துக்கோ ஜனவரி 10 ஆம் திகதிக்கு முன்னர் அறியத் தருமாறு ஆலயத்தினர் கேட்டுள்ளனர். (த)

# பிரதமரின் ஊடகச் செயலராக ஹேரத் நியமனம்

*கொழும்பு, ஜன. 3*



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகச் செயலராக விஜயானந்த ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஜனாதிபதி ஊடக ஒருங்கிணைப்புச் செயலராக இவர் பணியாற்றியிருந்தார்.

விஜயானந்தா ஹேரத் மீன்வள மற்றும் நீர்வள அமைச்சின் ஊடக அதிகாரியாகவும் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ஓ,5)

# குடும்பத் தலைவர் மீது தாக்குதல்

*சாவகச்சேரி, ஜன.3*

இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பத் தலைவர் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வரணிப் பகுதியில் இடம்பெற்றது.

கையில் பாதிப்பு ஏற்பட்ட குடும்பத் தலைவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

(ஐ-9)

# உறுதி மொழி எடுக்கும் நிகழ்வு

*முல்லைத்தீவு,ஜன.3*

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மாவட்ட சித்த மருத்துவமனையின் அரச ஊழியர்கள் உறுதி மொழி எடுக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட சித்த வைத்தியர் ஆர். மணிவண்ணன் இலங்கையின் தேசியக் கொடிய்ய ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து வைத்தியர் காண்டீபன், வைத்தியர் திருமதி ரதிபா, வைத்தியர் தர்சினி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-213)



# உயர்தரப் பரீட்சை 2019: மேலும் சில பெறுபேறுகள்

***யாழ்ப்பாணம்,ஜன.3***
***2019 ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த 27 ஆம் திகதி வெளியாகின.***
***அதற்கமைவாக வடக்கில் சில பாடசாலைகளின் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள் பின்வருமாறு:***

## கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

**வர்த்தகப் பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**
கே. தர்சிகன் - 3ஏ.

**பழைய பாடத்திட்டம்**
கே.தனுசியா-ஏ2பி.

**கலைப்பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**
எஸ்.பூரணவி -3ஏ, எஸ். புவனேஸ்வரி-2ஏபி.

**பழைய பாடத்திட்டம்**
எஸ்.கஜந்தினி - ஏபிசி.

**இலத்திரனியல் தொழிநுட்பப் பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**
ஆர்.அரியன்பன்-பி,2சி, எம்.தனுஜிகா-3சி, ஜெ.பிரவன்யா -2சிஎஸ்.

**உயிரியல் தொழிநுட்பப் பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**
என்.அனோஜா-பி2சி, எஸ்.லக்சிகா-2சிஎஸ், வி.விதுர்ஜன்- 2சிஎஸ்.

**பழைய பாடத்திட்டம்**
எஸ்.சுவாகி-2பிசி, எஸ்.நிலவழகன்-2பிசி, ஆர். சுகன்யா- 2சிஎஸ், பி.கேஜினி-2சிஎஸ்.

**விஞ்ஞானப் பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**
எஸ்.ஜெனுசன்-2ஏசி, பி.பாலசுதன்-ஏபிசி.

**பழைய பாடத்திட்டம்**
வி.யாழரசி-2ஏசி, பி.பகிந்தன்- ஏ2பி.

**கணிதப் பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**
எஸ்.ரேணுஜன்-3ஏ, எஸ்.சதுர்சன்-ஏ2பி, கே.பிரவின்-2ஏசி.

**பழைய பாடத்திட்டம்**
வி.கிருஷா - ஏ2பி.

## மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

**விஞ்ஞானப் பிரிவு**
கே.கவிப்பிரியா- 3ஏ, ரி.தனுயன்- ஏ2பி, பி. சங்கீதன் - 3பி, எஸ்.கஜீகரன்- பிசிஎஸ், கே. கஸ்தூரிகா- 2பிசி, கே.லக்சிகா- பி2சி, எஸ். பியூலா- பி2சி.

**கணிதப் பிரிவு**
கே.பானு- பி2சி, பி.கிந்துஜன்- 3சி, பி.தர்சிகா- பிசிஎஸ், என்.கார்த்திகன்-ஏசிஎஸ், எஸ்.யாதவன்- 3சி, கே.விதுரன்- 2சிஎஸ். வி.தன்சிகா- சி2எஸ்.

**வர்த்தகப் பிரிவு**
எஸ்.மகிழினி- 3ஏ, ஆர்.கஜதர்சனசர்மா- 3ஏ, எஸ்.நிலக்சன்- 3ஏ.

**கலைப் பிரிவு**
எஸ்.சர்மிகா- 3ஏ, ஆர்.எழில்பிரகாஸ்- 3ஏ, எஸ். மனுசா- 2ஏபி, ஆர்.நிசாந்தா- 2ஏபி, கே.சர்மினி- 2ஏபி, ஏ.சிவதர்சி- 3பி, என்.சஜிதா- ஏ2பி, ரி.யனுசிகா- ஏபிசி, கே.பிறேமலதா- ஏ2பி.

## மல்லாகம் மகா வித்தியாலயம்

**வர்த்தகப்பிரிவு**
தே.திலக்ஷன் - 3ஏ, ச.டெங்கிஸ்ரன்ஸ்- 3பி, ஹ.நிஜனா- 2சிஎஸ், த.சாதனா- 3எஸ்.

**கலைப்பிரிவு**
வ.ஜென்சி- 2ஏபி, ர.றெபேக்கா- 2ஏபி, சு.சிந்துஜன்- 2ஏபி, யூ.அனஸ்ரினா- 3பி, சி.சனுசிகா- 2பிசி, து.கிருஷாந்- ஏசிஎஸ், வி.துஷ்யந்தன்- பி2சி, உ.திவ்வியா- பி2சி, சோ.கஜானா- பிசிஎஸ், சி.சஞ்ஜீவ்- 3சி, சு.கீர்த்தனா- பி2எஸ், வி.ஜான்சிகா- 2சிஎஸ், போ.பிறிஸ்ரிகா- 2சிஎஸ், தி.மயூரிகா- 2சிஎஸ், இ.வாசுகி- சி2எஸ், கி. கிஷானி- சி2எஸ், ச.றீகன்- சி2எஸ், ம.விநோதா- சி2எஸ், ம.ரகிபன்- சி2எஸ், வி.ஜேனுசா- 3எஸ்.

## யாழ்.மத்திய கல்லூரி

**விஞ்ஞானப் பிரிவு**
ஈ. ஜயல்ஸ்பெல்மன்- ஏ2பி, எஸ். ஜெயவாசீசன் - ஏபிசி, எஸ்.பிரணவன்- 3சி, கே.டிலக்சன்- 3சி, எஸ்.சஞ்சீவன்- 2சிஎஸ், எஸ்.சிவபிரியன்- பிசிஎஸ், கே.ஜெயராமணன் - சி2எஸ், ஜே.செபான் - 3எஸ், ரி.சண்முகபிரியன்- சி2எஸ், எஸ்.யதுசன்- சி2எஸ்.

**கணிதப்பிரிவு**
என்.விதுர்சன்- 2ஏபி, எஸ்.சரண்ராஜ்- ஏ2எஸ், ஏ.டன்சன்- பி2எஸ், ரி.துஷ்யந்தன்- பிசிஎஸ், ஆர்.விதுர்சன்- 3எஸ், பி.அஜித்- 3எஸ், எஸ். மிக்சன்- சி2எஸ், வி.ஹரிசாந்- 3எஸ், ஏ.அஜீவன்- 3எஸ்.

**வர்த்தகப் பிரிவு**
பி.சிந்துஜன்- 2ஏபி, ஏ.கஜீவன்-2ஏசி, கே.சகிராம்-3ஏ, கே.கஜந்தன்- ஏ2பி.

**கலைப்பிரிவு**
வை.பானுசுஜன்-3ஏ, ஜி.ரஜீவன்- ஏ2பி, ரி.விதுசன்- 3பி, ரி.லியன்டோபயஸ்- 2பிசி, கே.டிலக்ஷன்- 2சி.

**தொழில்நுட்பப் பிரிவு**
ஏ.சபேசன்- 2பிசி, ஜே.ஜெயக்குமார்- ஏ2பி, என். கௌசன்- 2சிஎஸ். ஆர்.பிரணவன்- பி2சி, பி.நிதர்சன்- ஏசிஎஸ்.

## சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

**கலைப்பிரிவு**
த.கிருஸ்ரிகா -3ஏ, ந.கோபிராம்- 2ஏபி, ம.ரிசிகா- 2ஏபி, ஜெ.ஜெனுசன்- ஏ2பி, க.விஜிதா- ஏ2பி, தி.மதீசன்- ஏபிசி, ப.குகதர்சினி- ஏபிசி, அ.நிரோசன்- ஏபிசி, த.சங்கவி- 3பி.

**வர்த்தகப் பிரிவு**
வி.தர்சன்- 2ஏபி, அ.நவோமியா- 2ஏபி, இ.குமாரதாஸ்- ஏ2பி, ர.நிலக்ஸ்சிகா- ஏபிசி.

## நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

**கலைப் பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**
கோ.நிவேதிகா - ஏ2பி, செ.ஸ்ரீபனா -பி2சி, ஸ்ரீ. தீபனா - பிசிஎஸ், ம.தேனுஜன் - பி2சி, ம.றொசான் - பிசிஎஸ், பா.நிலக்ஷன் - 2பிஎஸ், கெ.கஜானன் - பி2எஸ், தி.டிலக்ஷன் - பி2சி, ஜெ.யதுஷன் - பி2எஸ், இ.வினோத் - சி2எஸ், சி.மலரவன் -பிசிஎஸ்.

**கலைப்பிரிவு**
**பழைய பாடத்திட்டம்**
ய.கேதினி - ஏபிசி, தி.அபிதா - 2சிஎஸ், தி.அதிசா - சி2எஸ்.

**வர்த்தகப்பிரிவு**
**பழைய பாடத்திட்டம்**
ச.துஜிதா - 2ஏபி, வி.வனஜா - ஏ2பி, ஸ்ரீ.சிய்ானா - பி2சி.

## முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

**வர்த்தகப் பிரிவு**
த.வேனுஜா-ஏ2பி, சி.பிறின்சிகா-2பிசி ,ஜெ. ஜசோதா-2பிசி ,க.சோபிசா-3பி, செ.சந்தியா -2சிஎஸ்.

**கலைப்பிரிவு**
சு.மயூரி-3ஏ, கோ.சானுஜா-ஏ2பி, யோ.கோகுலவாணி-2ஏசி,ச.சன்சிகா-ஏ2பி, செ.நிவே தினி- ஏபிசி, தெ.நிரோஷா-பி2சி, கு.சயந்தன்-ஏ2எஸ், ஸ்ரீ.மதன்ராஜ்-பிசிஎஸ்.

## கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

**வர்த்தகப் பிரிவு**
ச.பிரித்திகா-3ஏ, எ.மதுஷா -ஏ2பி, பி.வினோஜன் -பி2சி, எஸ்.திவ்ஜா-3சி, கே.சரணுஜா- சி2எஸ், வ.கிருசாந்தி-2சிஎஸ்.

**கலைப் பிரிவு**
வ.குயிலினி -2ஏபி, உ.நிதுஷன் -ஏ2பி, சு. அர்ச்சனா -பி2சி, எஸ்.துஜிதா-பி2சி,கே.நிக்ஷனா - பி2சி, ரி.பிரியந்தி-பிசிஎஸ், எம்.கிசாளினி-3சி.

## இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்

**கலைப்பிரிவு**
ம.கேனுஜா - 2ஏபி , சி.பவதர்ஜினி- ஏ2பி, ச. சஞ்சிதா -ஏபிசி ,த.றொசாந்தன்-ஏ2பி, ஜெ. அபினா-3பி, கு.வேனுகா-ஏசிஎஸ், யோ. உஷாந்தினி-2பிசி, ரூ.மகினி-பி2சி, ச.சுகந்தன்- பி2சி, சு.தசிந்தன்-பி2சி, ம.நிகோமி-3சி, ம.ஜராஜ் -3சி, து.சுகிர்தன்-2சிஎஸ், ஆ.சௌதா யினி- 2சிஎஸ்,க.கஜந்தினி-பி2எஸ், சி.விமல்ராஜ்-பி2எஸ், உ.கோகுலன்- பி2எஸ், க.ரஜனிக்கா - 3எஸ்.

# கசிப்பு உற்பத்தியை முடக்கிய இளைஞர்கள்

*கிளிநொச்சி, ஜன.3*
கிளிநொச்சி, கோணாவில் கிராமத்தில் இளைஞர்கள் இணைந்து கசிப்பு உற்பத்தி நிலையங்களை அழித்துள்ளனர்.
கசிப்பு உற்பத்தி தொடர்பாக பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்ட போதும், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாததை அடுத்தே இளைஞர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.
15 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இணைந்து கோணாவில், யூனியன் குளம் பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கசிப்பு உற்பத்தி நிலையங்களை அழிக்கப்பட்டன.
15இற்கும் மேற்பட்ட பரல்கள், 25 இற்கும் மேற்பட்ட பிளாஸ்ரிக் கான்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. இந்த நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவ



தாக இளைஞர்கள் தெரிவித்தனர். இளைஞர்களின் இந்த நடவடிக்கைக்குப் பொதுமக்கள் மத்தியில் வரவேற்புக் கிடைத்துள்ளது.(ஐ-222)

# கூட்டமைப்பின் முடிவால் ஒற்றுமைக்கு 'வேட்டு'

## ஒப்பாரி வைக்கிறது மனோ அணி

*கொழும்பு, ஜன. 3*

போர் முடிவடைந்த பின்னர் 'ஒற்றுமை' என்பதே தமிழர்களுக்கு எஞ்சியிருக்கும் பலம் பொருந்திய ஆயுதமாகும். அதனை சிதைப்பதற்கு பேரினவாதிகள்வழி மீது விழி வைத்து காத்திருக்கின்றனர். எனவே பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் சிக்கும் வகையில் தமிழ்க்கட்சிகள் தீர்மானங்களை எடுக்ககூடாது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் கொழும்பு, கம்பஹா மற்றும் மலையகத்தில் போட்டியிடுவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டுவருவதாகதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் அறிவித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும், எல்லா தொகுதிகளிலும் போட்டியிடக்கூடிய ஜனநாயக உரிமை இருக்கின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டால்கூட அதனை நாம் எதிர்க்கப் போவதில்லை. நடைமுறை அரசியலை புரிந்துகொண்டு களநிலைவரம் குறித்து ஆராய்ந்து முடிவெடுப்பதே சாலச்சிறந்ததாகும்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மாகாணம், நுவரெலியா போன்ற பகுதிகளில் தமிழக் கட்சிகளுக்கிடையில் பலமுனைப் போட்டி நிலவினால்கூட தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கும், அரசியல் இருப்புக்கும் சிக்கல் வரப்போவதில்லை. ஆனால், கண்டி, பதுளை, அம்பாறை, திருகோணமலை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தமிழர் தரப்பு பல அணிகளாகப் பிரிந்துநின்று போட்டியிட்டால் அது ஆங்காங்கே உள்ள தமிழ் வாக்குகளைச் சிதறடித்து, தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையும் இல்லாமல் செய்து, எதிரிகளுக்கு களம் அமைத்துக்கொடுத்துவிடும்.

இந்த மாவட்டங்களில் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை ஒரு தரப்பு பெற்றால் மட்டுமே பிரதிநிதித்துவம் உறுதியாகும் என்ற யதார்த்த நிலைமையை சுமந்திரன் போன்றோர் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் முற்போக்கு கூட்டணியானது தனது அரசியல் தளத்தில் பலமாகவே இருக்கின்றது. மக்களும் கூட்டணியின் தேவையை உணர்ந்துவிட்டதால், எந்தக் கட்சி, எந்த வடிவில் போட்டியிட்டாலும் இம்முறை எமது வெற்றியை தடுக்கமுடியாது.

ஆனால், கடந்த காலங்களில் புரிந்துணர்வுடனும், விட்டுக்கொடுப்புகளுடனும் செயற்பட்ட தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட முக்கியமான தமிழ்க் கட்சிகள் பிரிந்து நின்று மோதிக்கொண்டால் அது பேரினவாதிகளுக்கு வலிந்துசென்று தீனிபோடுவதாக அமைந்துவிடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சிப் பதவியை வகித்தபோதுகூட தெற்கில் உரிய வகையில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்காத சுமந்திரன், யதார்த்தம் புரியாமல் தேர்தல்கள் பற்றி அறிவிப்பு விடுத்துவருகிறார். உண்மையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தாம் சந்திக்கின்ற பலத்த எதிர்ப்புகளாலும், மக்கள் மத்தியிலான செல்வாக்கு சரிவுகளாலும் தாம் எதிர்கொள்ளகூடிய வாக்கு சரிவுகளை சரி செய்யவே தெற்கில் போட்டியிடும் எண்ணத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த முறை கூட்டமைப்பு பெற்ற இரண்டு தேசிய பட்டியல் ஆசனங்கள் இம்முறை கிடைக்காது என்று சுமந்திரன் நன்கறிவார். ஆகவே தமது தேசிய பட்டியலுக்கான வாக்குகளை அதிகரிக்கும் ஒரே உத்தேசம் மட்டுமே அவருக்கு இருக்கின்றது. இந்த வாக்கு வேட்டையால், தமிழ் வாக்குகள் சிதறி அதன் மூலம் தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் வாழும் தமிழ் மக்கள் தங்கள் அரசியல் பிரதிநிதித்துவங்களை இழந்தாலும் அதுபற்றிய எந்த சமூக பொறுப்பும் அற்ற அரசியல்வாதியாக சுமந்திரன் மாறியுள்ளார் என்பதை தமிழ் வரலாறு பதிவு செய்கிறது.

தெற்கில் நிலவும் அரசியல், சமூகள நிலவர பின்னணியில் தெற்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆற்றக்கூடிய எந்த ஒரு பணியும் கிடையாது என்பதை சிறு குழந்தையும் அறியும்.

சுமந்திரன் தனது அரசியல் முதிர்ச்சியற்ற முடிவுகளால் கூட்டமைப்புக்கு ஏற்கனவே பெரிய சரிவுகளை ஏற்படுத்தி உள்ளார். அந்த வரிசையில் அவரது அடுத்த மிக மோசமான முடிவுதான் இந்த முடிவாகும். இதனால் ஏற்படும் அரசியல் விபரீதங்களுக்கு சுமந்திரனே பொறுப்பேற்க வேண்டும் - என்றார். (ஒ.5)

# சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு 'ஆப்பு'

## வர்த்தமானி வெளியானது

*கொழும்பு, ஜன. 3*

அரசமைப்பின் 22ஆவது சீர்திருத்தம் தொடர்பிலான விசேட வர்த்தமானி நேற்று வெளியாகியுள்ளது.

அரசமைப்பின் 22வது சீர்திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணைக்கான விசேட வர்த்தமானி அறிவித்தலே வெளியிடப்பட்டுள்ளது.

அதில், அரசமைப்பின் 99வது உறுப்புரையில் 6ஆவதுபந்தியின்(அ)உபபந்தியில்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை திருத்தும் விதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பந்தியில் குறிப்பிடப்படுவது, ஏதேனும் தேர்தல் மாவட்டத்திலான தேர்தல் எதிலும் பெறப்பட்ட மொத்த வாக்குகளில் (இருபதில் ஒன்றுக்கு குறைவான) வாக்குகளை பெறுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியும், சுயேச்சைக் குழுவும் அத் தேர்தல் மாவட்டத்துக்கு அத்தகைய கட்சியின் அல்லது குழுவின் எவரேனும் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவதில் இருந்துதகைமையிழத்தல்வேண்டும்என கூறப்பட்டுள்ளது. எனினும் இந்த வாக்கியத்தில் 'மொத்த வாக்குகளின் இருபதில் ஒன்றுக்கு குறைவான' என்னும் சொற்களை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக 'மொத்த வாக்குகளின் எட்டில் ஒன்றுக்கு குறைவான' என்ற சொற்களை பதிவீடுசெய்து இருத்தல் திருத்தியமைக்கப்படுகிறது எனவும், அதேபோல் இச்சட்டத்தின் சிங்களதமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல, 22வது திருத்தத்தில், நீதிச்சேவை ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னரே நீதிபதிகளை நியமிக்க வேண்டும், பிரதம அமைச்சரின் கருத்துக்களை கேட்டறிந்த பின்னரே நியமிக்க வேண்டும் என அரசமைப்பில்குறிப்பிடப்படுவதைமாற்றும்விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த திருத்தங் களின் பிரகாரம் சட்டமா அதிபர், நீதிபதிகள், கணக்காய் வாளர் நாயகம், பொலிஸ்மா அதிபர் ஆகிய நியமனங்களை வழங்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,22)



# வடமாகாண மக்களுக்காக என்னை அர்ப்பணிப்பேன்!

## வடக்கின் ஆளுநர் உருக்கம்

*வவுனியா, ஜன.3*

வலிகளைச் சுமந்த வடக்கு மாகாண மக்களுக்கு என்னை அர்ப்பணிப்பேன் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ்.

வடக்கு மாகாண ஆளுநராகப் பதவியேற்றுள்ள திருமதி பி.எஸ்.எம். சாள்ஸுக்கு வவுனியாவில் நேற்று வரவேற்பளிக்கப்பட்டது.

அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மக்கள் வழங்கிய வரவேற்பைப் பார்க்கின்றபோது எனது மனம் கனத்து விட்டது. பெரும் பொறுப்பொன்று எனக்குச் சுமத்தப்பட்டுள்ளதை உணர்ந்து கொண்டேன். உங்களுக்காக நான் நிச்சயமாக இரவு பகலாகக் கடமையாற்றுவேன்.

பலமுறை தயங்கியும், மறுத்தும் இருந்த என்னைப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மக்களுக்காக நீங்கள் நிச்சயமாகச் சேவையாற்ற வேண்டும் என்று பலரும் வற்புறுத்தியமையால் இறுதியில் வடக்கு மாகாண ஆளுநராக வந்துள்ளேன்.

ஜனாதிபதி என்னிடம் வடக்கு மாகாண மக்களிடம் தீராத வலிகள் இருக்கின்றன. அவற்றை ஆற்றுப்படுத்த வேண்டிய தேவையிருக்கின்றது. நிறைவுபடுத்தப்படாத வேலைகள் இருக்கின்றன. தேவைப்படுகின்ற அபிவிருத்திகள் இருக்கின்றன. அத்தனையையும் செய்வதற்கும், நிறைவேற்றுவதற்கும் தேவையான அனைத்தையும் செய்வேன் என்று தெரிவித்தார்.

அரசியலுக்கு அப்பால், கொள்கைகளுக்கு அப்பால், மதங்களுக்கு அப்பால், இனங்க ளுக்கு அப்பால், கருத்துக்களுக்கு அப்பால் நீங்கள் என்னோடு இணைந்து நிற்க வேண்டும் - என்றார். (எ-110)

# தூக்கத்தில் இருந்த கணவனை கல் எறிந்து கொன்ற மனைவி

கொழும்பு, ஜன.03

நித்திரையில் இருந்த 23 வயதான கணவன் மீது, கருங்கல்லை எறிந்து அவரது மனைவி கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கம்பஹா, மாகொல - சிறிமங்கல பகுதியிலலேயே இந்தச் சம்பவம் புத்தாண்டு தினத்தன்று நடைபெற்றுள்ளது.

இந்த சம்பவத்தின் பின்பு குறித்த பெண் பொலிஸில் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவத்தில் கொலை செய்யப்பட்ட கணவர், ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனவும் மேலும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக சபுகஸ்கந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கணினிப் பயிற்சி இன்று ஆரம்பம்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கல்வி கற்று கடந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இலவச கணினிப் பயிற்சி இன்று வெள்ளிக்கிழமை கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் அன்றயை தினம் காலை வருகை தருமாறு பாடசாலை அதிபர் செ. பேரின்பநாதன் அறிவித்துள்ளார். (ஐ-9)


## நினைவினில் 23 வருடங்கள்



அமரர்

**வி.எஸ்.குணசிங்கம்**

(ஓய்வுபெற்ற வனபரிபாலன திணைக்கள எழுதுநர்)

உறவாக 05.02.1931 — நினைவாக 16.12.1996


நீண்டகால இடைவெளி நீங்கள்
எங்கள் இருப்பிடம் துறந்து...
நாங்கள் உங்கள் அருகாமை இழந்து...
புதிய உறவுகளின் வருகை
நினைவுகளில் பலநூறு சேர்க்கை –
இருந்தும்
உங்களின் ஆஸ்தானம் இன்னும்
அப்படியே தான்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

இல.03, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 05 . 1942 — மறைவு 13 . 01 . 2019

**வேலாயுதம் திருநாவுக்கரசு**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

72/17, பிரம்படி லேன், கொக்குவில்.

குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி

திருமதி

**தன்பாக்கியம் சூரியகுமாரன்**



தோற்றம் 25 . 04 . 1955 — மறைவு 18 . 12 . 2015

திதி : மார்கழிமாத பூர்வபக்க அட்டமி 03.01.2020

எல்லோர்க்கும் நல்லவராக வல்லவர் ஆக இப்புவியினில்
அறுபது ஆண்டுகள் அன்பாக வாழ்ந்த எம் - குலவிளக்கே
தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டது
தங்களின் உருவமும் அறிவுரைகளும் என்றும்
எங்கள் முன்நிழலாடுகிறது
தங்கள் படத்தைப் பார்த்து ஆறுதலடைகின்றோம்
வானத்தில் இருந்து ஆசீர்வதித்து அருளுங்கள்

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கேணியடி வீதி, மீசாலை மேற்கு.
03.01.2020

(CS 23742)(04.17)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சந்திரலதா நிமலராங்கன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

**வ.கைலேஸ்வரன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை



## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி மு.குகதர்சினி அவர்களின் பாசமிகு மாமியாராகிய


**கந்தையா கதிராசிப்பிள்ளை**

தோற்றம்: 14 . 02 . 1943 — மறைவு 31 . 12 . 2019

அவர்கள் 31.12.2019 அன்று இறைபதம்
அடைந்தமையால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 03 . 01 . 1948 — ஆண்டவன் அடியில் 14 . 01 . 2019

**சின்னத்தம்பி சிவலிங்கம்**

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், Jaffna RDHS)

உங்கள் இருப்பிற்கும் இறப்பிற்குமான இடைவெளி
இமாலயமாய் விரிகிறது......
அனுதினமும் அன்புடன் வழிநடத்திய
எம் அன்புத் தலைவா!
உங்கள் அருகாமையை இழந்து
தவிப்புடன் கடந்தது
ஆண்டு ஒன்று....

திருநெல்வேலி
077 8918 300

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.



# சுகாதார பிரிவினரிடம் சிக்கிய வெயில் பட்ட மென்பானங்கள்

*பருத்தித்துறை, ஜன.3*

சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் வகையில் வெயில்படக்கூடியவாறு விநியோகிக்கப்பட்ட மென்பானங்களை சுகாதாரப் பிரிவினர் கைப்பற்றிய சம்பவம் ஒன்று பருத்தித்துறையில் இடம்பெற்றுள்ளது.

நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு. பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பரிசோதனைகள் பருத்தித்துறை பொது சுகாதார பரிசோதகர்களால் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டன. பருத்தித்துறை கிராமக்.கோட்டுச் சந்திக்கு அண்மையில் நேரடியாக வெயில் படக்கூடியவாறு மென்பானங்களை வைத்து. வாகனம் மூலம் வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட மென்பானங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டன. பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். மென்பானங்களில் ஒரு பகுதி சட்ட நடவடிக்கைக்காக எடுத்துச் செல்லப்பட்டது. நேரடியாக சூரிய வெப்பத்துக்கு உட்படும் மென்பானங்கள் மற்றும் குடிதண்ணீர்ப்போத்தல்கள் போன்றவற்றை அருந்துவதால் சுகாதார பாதிப்புகள் ஏற்படும் என்று சுகாதாரப் பிரிவினர் ஏற்கனவே எச்சரித்திருந்தனர். (ஜ-9)

# மதவாத தொற்றுநோய் மன்னாரில் பரவுகிறது

## *தர்மகுமாரக் குருக்கள் ஆதங்கம்*


*மன்னார், ஜன.3*

மன்னார் மாவட்டம் வளர்ச்சிப்பாதையில் செல்லவேண்டுமானால், மதவாதம் தவிர்க்கப்பட வேண்டும் என்று மன்னார் அறநெறி இணையங்களின் தலைவர் மஹா தர்மகுமாரக் குருக்கள் தெரிவித்தார். மன்னாருக்குள் நுழைந்தவுடன் கேட்கப்படுவது "நீ இந்துவா கிறிஸ்தவனா?" என்பதே. இந்த மனநிலை ஒரு தீராத நோயாகப்பரவிக்கொண்டுவருகிறது என்றும் அவர் தெரிவித்தார். மன்னாரில் கடந்தவாரம் நடைபெற்ற ஆறுமுகநாவலர் விழாவில் தலைமையுரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிமாவட்டங்களில் இருப்பவர்களுக்கு சமூகப்பிரச்சினைகள், சமயப்பிரச்சினைகள் இல்லை. அதனால் வெளிமாவட்டத்தில் இருக்கின்றவர்கள் மன்னார் மாவட்டம் பற்றிச் சிந்திப்பது குறைவு. ஆனால் மன்னார் இவற்றிலிருந்து வேறுபட்டது.

மன்னாருக்குள் நுழைந்தவுடன் கேட்கப்படுவது "நீ இந்துவா? கிறிஸ்தவனா?" என்பதுதான். இந்த மனநிலை ஒரு தீராத நோயாகப் பரவிக்கொண்டு வருகிறது. இது மாற்றப்பட வேண்டும். மன்னாரில்தான் இந்த நிலைமை. வெளி மாவட்டங்களில் இத்தகைய பிரச்சினைகள் இல்லை. மன்னாருக்குள் வரும்போது மட்டும்தான் இந்தப் பிரச்சினை எழுகின்றது. இதனால் மன்னாருக்கு வருவதற்கு எவரும் விரும்பமாட்டார்கள். அப்படி வந்து இரண்டொரு வருடங்கள் இருந்துவிட்டால் திரும்பிப் போகமாட்டார்கள். இங்கு எல்லா தொழிலும் செய்யக் கூடிய வளம் உள்ளது. மதப் பாகுபாடு தவிர்க்கப்படுமானால் மன்னாரின் வளர்ச்சி நிகரற்றதாக இருக்கும். - என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-213)



# தொடரும் மணல் கடத்தல்

*வலி.தென்மேற்கு ஜன.3*

கட்டுப்பாடும், கண்காணிப்பும் அதிகரிக்கப்பட்டுள்ள போதும் மணல் கொள்ளை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அக்கறையின்மையே மணல் கொள்ளை தொடர்வதற்குக் காரணம் என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். கிளாலியில் தனியார் காணியிலிருந்து எவரினதும் அனுமதியின்றியும் தினசரி இடம்பெற்று வந்த மணல் கொள்ளை, பொது மக்களின் எதிர்ப்பை அடுத்து, அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் குறைந்திருந்தது.

எனினும் சில நாள்களுக்குப் பின் மணல் கொள்ளை மீண்டும் இடம்பெற்று வருகின்றது. கடந்த இரண்டு தினங்களுக்கு முன் அதிகாலை நேரத்தில், அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, வழமையாக மணல் கடத்தலில் ஈடுபடும் நபரொருவர் மூன்று தடவைகள் உழவு இயந்திரத்தில் மணலை ஏற்றிச் சென்றுள்ளார் எனவும், இதனை எவரும் கண்டுகொள்ளவில்லை என்றும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (க-115)

# கால அவகாசம் நீடிப்பு!!!

*கொழும்பு, ஜன.3*

முன்னைய அரசால், வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களுக்கு அரசியல் ரீதியான நியமனங்களைப் பெற்றவர்கள் நாடு திரும்புவதற்கான கால அவகாசத்தை புதிய அரசு நீடித்துள்ளது. அரசியல் ரீதியாக நியமனம் பெற்ற தூதுவர்கள், மற்றும் இராஜதந்திரிகள் நாடுதிரும்புவதற்கான காலம் டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றிருந்தது. இந்த நிலையிலேயே அவர்கள் நாடு திரும்ப மேலும் 15 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# புதுவருட தினத்தில் வழிபாடு

*யாழ்ப்பாணம், ஜன.3*

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகக் கலாசாரப் பிரிவால் "தொஸ்மகே பான" வேலைத் திட்டத்துக்கு அமைவாகக் கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் சர்வமத வேலைத் திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டு புது வருட மத வழிபாடுகள் மானிப்பாய் மருதடி பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

நாட்டு மக்கள் அனைவருக்கும் சமாதானம், சாந்தி, சௌபாக்கியம் வேண்டிப் பிராத்தனை களும் நடத்தப்பட்டன.

இந்த நிகழ்வு வலி. தென்மேற்குப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளின் கலாசார உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-39)

# முல்லை.மாந்தை கிழக்கில் அபிவிருத்திக் குழு கூட்டம்

*முல்லைத்தீவு, ஜன.3*

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் நடப்பாண்டுக்கான பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி.ஆர்.ரஞ்சனாவின் நெறிப்படுத்தலில், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சதாசிவம் கனகரத்தினம் தலைமையில் வன்னி மாவட்ட் நாடாளுமன்ற உறுப்பினரும் புனர்வாழ்வு மீள் குடியேற்றம் வடக்கு அபிவிருத்தி முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தானின் பங்கேற்புடன் அபிவிருத்திக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

பிரதேசத்தின் வீதி, உட்கட்டமைப்பு, விவசாயம், பாடசாலைகளின் அபிவிருத்தி, வீட்டுத் திட்டம் போன்ற விடயங்கள் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன. மணல் அகழ்வில் ஏற்படும் சிக்கல்கள், அவற்றை தீர்ப்பதற்கான வழிவகைகள் பற்றியும், கூட்டத்தில் பேசப்பட்டன.

திணைக்களத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கூட்டத்தில் கலந்துகொண்டு பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில் கருத்துக்களையும், பங்களிப்புக்களையும் வழங்கினர். (ஜ-222)





## புத்தாண்டு தினத்தில் மாணவருக்கு உதவிகள்

தென்மராட்சி, ஜன.3

புத்தாண்டு தினமான நேற்றுமுன்தினம் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நடவடிக்கை தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொருளாதார நிலையில் பின்தங்கிய 100 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கல்வியே ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அடி நாதமாக இருப்பதால் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அதிகூடிய முயற்சி எடுத்து அவர்களது கல்வி நடவடிக்கை மேம்பட அயராது பாடுபட வேண்டும் என்று பிரதேச செயலர் நிகழ்வில் குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர் அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ-9)

## பொதுநோக்கு மண்டபம் கொடிகாமத்தில் திறப்பு

கொடிகாமம், ஜன.3

கொடிகாமம் தெற்கு ஜே/328 கிராம அலுவலர் பிரிவில் பொதுநோக்கு மண்டபம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

பிற்பகல் 4.30 மணிக்கு சாவகச்சேரிப் பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் சி.சிவனேசன் தலைமையில் நடந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 2 இலட்சம் ரூபா செலவில் இந்தப் பொதுநோக்கு மண்டபம் சீரமைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் இணைப்பாளர் செ.பிரதாப், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி, கிராம மக்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-159)

# வடக்கின் ஆளுநருக்கு வவுனியாவில் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜன.3

**வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸுக்கு வவுனியாவில் நேற்று வரவேற்பு அளிக்கப்பட்டது.**



வவுனியா மாவட்டப் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நகர சபை கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா மாவட்டத் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், வர்த்தக சங்கம், வர்த்தக நலன்புரிச் சங்கம், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், தமிழ் விருட்சம் எனப் பல அமைப்புக்கள் இணைந்து இந்த வரவேற்பு நிகழ்வை நடத்தின.

நிகழ்வில் ஆளுநருக்கு மலர் மாலை அணிவித்துப் பொன்னாடை போர்த்தி வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மக்கள் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-ரி4)

## பாற்குட பவனியும் சங்காபிஷேகமும்

யாழ்ப்பாணம்,ஜன.3

புதுவருடத்தை முன்னிட்டு கல்வியங்காடு ஸ்ரீ வீரபத்திரர் சபரீச ஐயப்பன் கோவிலில் பாற்குடப் பவனியும், 108 கலச சங்காபிஷேகமும் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலில் இடம்பெற்ற சிறப்பு பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து கல்வியங்காடு ஸ்ரீ வீரபத்திரர் சபரீச ஐயப்பன் கோவில் நோக்கி பாற்குட பவனி ஆரம்பமானது.

இந்தப் பவனியில் பெருமளவிலான பெண்கள் கலந்துகொண்டனர்.

பாற்குடபவனி வீரபத்திரர் சபரீச ஐயப்பன் ஆலயத்தைச் சென்றடைந்ததும் ஐயப்ப சுவாமிக்கு 108 கலச அபிஷேகம் இடம்பெற்றது. (ஐ)





## பரு. வைத்தியசாலையின் சீர்கேடுகளைப் போக்குக!

வடமராட்சி, ஜன.3

பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையில் நீண்ட காலமாகச் சுகாதாரச் சீர்கேடுகள் இருந்து வருகின்றன என்றும் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை விடுதிகளின் மலசல கூடங்கள் சீரான முறையில் சுத்தம் செய்யப்படாதமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். கட்டாக்காலி நாய்களின் தொல்லையும் அங்கு அதிகரித்துள்ளது. விடுதிச் சுற்றாடலில் அவை பெருகியுள்ளன. நுளம்புத் தொல்லையும் அதிகரித்துள்ளது.

அதனால் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். நோயாளர்களைப் பார்ப்பதற்கு வருபவர்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வைத்தியசாலையில் காணப்படும் இவ்வாறான சீர்கேடுகளைப் போக்க வைத்தியசாலை வட்டாரங்கள் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-173)

## மூதாட்டி சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.3

வட்டுக்கோட்டையில் வயோதிபப் பெண் ஒருவர் வீட்டில் இருந்து சடலமாக நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை வடக்குக் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கலைநகர் கிராமத்தில் வீட்டில் தனிமையில் வசித்து வந்த சிவஞானசுந்தரம் லலிதாதேவி (வயது-67) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் சில நாள்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது. வட்டுக்கோட்டைப் பொலிஸார் இதுதொடர்பானவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-111)

# உங்கள் குணாதிசயங்களை கண்டறியும் ஜப்பானிய சோதிடம்

(தொடர்ச்சி)



உங்கள் பெயரை ஆங்கிலத்தில் எழுதிக்கொள்ளுங்கள். அதில் மூன்றாவதாக வரும் எழுத்துக்கான விளக்கம்தான் உங்களின் குணாதிசயம்! உதாரணமாக ஆங்கிலத்தில் Mathusha ஆக இருந்தால் 'Mathusha'வில் வரும் 't'யைதான் தெரிவு செய்ய வேண்டும்!

G புதிய புதிய விஷயங்களைச் செய்வதில் ஆர்வமிக்கவர்கள். விருப்பப்படி வாழ நினைப்பார்கள். சற்று புத்திசாலியாகவும், விரைவாகச் சிந்திப்பவருமாக இருப்பார்கள். ஒருவர் சொல்வது உண்மையா? இல்லையா? என்பதைக் கண்டுபிடித்து விடுவார்கள்.



H மூர்க்க குணம் அதிகமாக இருக்கும். தொழில் செய்ய ஏற்றவர்கள். தலைமைப் பண்புமிக்கவர்கள். பொறுமையும், பொறுப்புணர்ச்சியும் அதிகமாக இருக்கும். வெற்றிக்காக அதிகம் உழைப்பார்கள். சுயநலம் அதிகம்.

I புனிதமான எண்ணங்களையும், கனிவான மனதையும் கொண்டவர்கள். எந்த முடிவையும் யோசித்த பிறகே எடுப்பார்கள். மற்றவர்களுக்கு உதவி செய்வது இவர்களது இயற்கையான குணம். இவர்களுக்கு அதிர்ஷ்டம் சற்று குறைவுதான். சிலசமயம் மற்றவர்களை எரிச்சலூட்டுவார்கள். மற்றவர்களிடம் எளிதில் ஏமாறுவார்கள்.

J சூழ்நிலையை உணர்ந்து அதற்கு ஏற்ப செயல்படுவார்கள். நினைத்ததை அடைய எதை வேண்டுமானாலும் இழக்கத் தயாராக இருப்பார்கள். தன்னம்பிக்கையும், தீர்மானமும் இவர்களிடம் அதிகமாகக் காணப்படும். வாழ்க்கைத் துணையைப் புரிந்துகொண்டு செயல்படுவார்கள்.

K மற்றவர்களின் கவனத்தை அதிகமாக ஈர்ப்பார்கள். பிரச்சினை ஏற்பட்டால் அதில் இருவரையும் சமாதானப்படுத்துவது இவர்களாகத்தான் இருக்கும். மற்றவர்கள் மீது அக்கறை கொண்டவர்கள். வாழக்கைத் துணையின் அன்பு உறுதியானதாக இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள்.


L தங்களது வாழ்க்கையையும் சக மனிதர்களையும் இவர்கள் பார்க்கும் விதமே வித்தியாசமாக இருக்கும். இந்த உலகிலேயே இவர்களுக்கு முக்கியமான நபர், இவர்களது வாழ்க்கைத் துணைதான். நகைச்சுவை உணர்வு மிக்கவர்கள்.

M இயற்கையாகவே உண்மையானவர்கள். கடும் உழைப்பாளிகள். உழைப்புக்கு அடிமையானவர்கள். மற்றவர்களிடம் உதவி கேட்க மாட்டார்கள். எதுவாக இருந்தாலும், தாங்களே செய்துகொள்வார்கள். பொறுமையை யார் போதித்தாலும் கோபம் பொத்துக்கொண்டு வரும்.

N எதைச் செய்தாலும் அதைச் சரியாக செய்ய வேண்டும் என நினைப்பவர்கள். மற்றவர்களுடன் நன்றாகப் பழகுவார்கள். ஆட்டு மந்தை போல் செயல்படமாட்டார்கள். தனியாகத் தெரிய வேண்டும் என நினைப்பார்கள்.

(தொடரும்)

# மார்கழி மாத ராசிபலன்



# அதிர்ஷ்டத்தை அள்ளப் போகும் ராசிக்காரர்கள் யார்?

## கும்பம்

கும்ப ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் சனிபகவான் உங்கள் ராசிக்கு 11 ல் இருப்பதாலும், மாத முற்பகுதியில் உங்கள் ராசிக்கு 11 ல் 5 கிரகங்கள் சேர்க்கை பெறுவதாலும் இது உங்களுக்கு பல வகையிலும் யோகமான காலமாகும். உங்கள் தொழில் மற்றும் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பல வகையில் தனவரவு உண்டாகும். நீண்ட நாளாக வரவேண்டிய பணம் கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். உயரதிகாரிகள் உங்களுக்குச் சாதகமாகச் செயற்படுவார்கள். உங்கள் இனிமையான பேச்சால் அனைவரையும் வசீகரிப்பீர்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். பொருளாதார நிலையில் உயர்வு ஏற்படும். சகோதர, சகோதரிகளால் ஆதாயம் கிடைக்கும் . உங்கள் மனதில் தைரியம், உற்சாகம் அதிகரிக்கும். அண்டை, அயலாருடன் நட்பு அதிகரிக்கும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு. தாய் மற்றும் உறவினர்களால் பிரச்சினை வர வாய்ப்புள்ளதால் கவனம் தேவை. தாயாருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். வாகனங்களில் பழுது ஏற்பட்டு நீங்கும். குழந்தைகள் உடல் நலனில் அதிக கவனம் தேவை. பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம். எதிரிகளிடம் எச்சரிக்கை தேவை. கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு வரவாய்ப்புள்ளதால் ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்துச் செல்வது நல்லது.

வியாபாரத்தில் கூட்டாளிகளால் விரயம் ஏற்பட வாய்ப்புள்ளதால், கூட்டாளிகளைக் கண்காணிப்பில் வைத்துக் கொள்வது நல்லது. தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். இந்த மாதப் பிற்பகுதியில் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். உங்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றியடையும். வீட்டு வசதிகளை மேம்படுத்த அதிக செலவு செய்வீர்கள்

**அதிர்ஷ்டமான நாள்கள்:**
**ஜனவரி 12, 13, 14.**

## மீனம்

அனைவரையும் தங்களின் திறமையால் வசீகரிக்கும் தன்மையுடைய மீன ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் குருபகவான் உங்கள் ராசிக்கு 10 இல் சஞ்சரிப்பதால் தொழில் மற்றும் உத்தியோகத்தில் சிறு, சிறு பிரச்சினை இருந்தாலும், எதையும் சமாளிக்கும் திறன் அதிகரிக்கும். உங்கள் செயல்பாடுகளில் ஒவ்வொன்றிலும் உங்கள் திறமை வெளிப்படும். பொருளாதார நிலையில் நல்ல உயர்வு ஏற்படும். எதிர்பாராத அதிர்ஷ்டமும், தனவரவும் உண்டு. குடும்ப உறவுகளில் சிறு, சிறு பிரச்சினைகள் வந்து நீங்கும். சகோதர, சகோதரிகளால் ஆதாயம் உண்டு. உங்கள் முயற்சிகள் வெற்றியடையும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு. புதிய ஆபரண சேர்க்கை உண்டாகும். வீடு, நில, வாகன தொடர்பான ஆவணங்களில் கவனம் தேவை. வாகன பயணங்களில் தேவையான ஆவணங்களைச் சரியாக வைத்து கொள்ளுங்கள். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. தாயுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பூர்வீக சொத்து விடயங்களில் தற்போது அமைதி காப்பது நல்லது.

குழந்தைகள் உடல் நிலையில் கவனம் தேவை. கணவன் மனைவிக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். இல்லற வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படும். தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புதிய யுக்திகளால் இலாபத்தை பெருக்குவீர்கள்.

உங்கள் வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். தொழில் மற்றும் உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். உங்கள் கடமைகளை நிறைவேற்ற ஓய்வில்லாமல் உழைக்க வேண்டியிருக்கும். புதிய பொறுப்புக்கள் தேடி வரும். உயரதிகாரிகள் உங்கள் கடின உழைப்பிற்கான அங்கீகாரம் தருவார்கள். ஆனால் பொறுமை தேவை.

**அதிர்ஷ்டமான நாள்கள்:**
**ஜனவரி 13, 14.**

# ஈ.பி.டி.பியை துரத்தியடிப்போம்!

## முன்னணி அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜன. 3

"டக்ளஸ் தேவானந்தா வெள்ளைவான் ஓடுவதை நாம் அனுமதிக்க முடியாது. இதை அனுமதித்தால் நீங்கள் பழையபடி உங்கள் கொலைக் கலாசாரத்தை ஆரம்பித்து விடுவீர்கள். இத்தோடு நிறுத்தி விடுங்கள். இல்லையேல் சிறிதர் தியேட்டருக்குள் புகுந்து உங்களை யாழ்ப்பாணத்தை விட்டே துரத்தியடிக்க வேண்டி வரும்" இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டஆலோசகர் க.சுகாஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது. வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோர் நடத்திய போராட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் ஒருவர் ஈ.பி.டி.பி.யினரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனைக் கண்டித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

இதில் சுகாஸ் தெரிவித்ததாவது:

"பலவந்தமாக அரச படைகளாலும், அரச ஒட்டுக் குழுக்களாலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிவேண்டிப் போராடிய சகோதரர் ராஜ்குமாரை ஈ.பி.டி.பி. ஒட்டுக்குழுவினர் தாக்கியமையை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். டக்ளஸ் தேவானந்தாவுக்கு இறுதி எச்சரிக்கையை விடுக்க விரும்புகின்றோம்.

டக்ளஸ் தேவானந்தாவே, சாத்தானாகிய நீங்கள் வேதம் ஓத முற்படவேண்டாம். நீங்கள் செய்தவற்றை நாங்கள் ஒருபோதும் மறக்கமாட்டோம். எங்களுடைய உறவுகள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமைக்கு வவுனியாவில் எப்படிச் சித்தார்த்தன் காரணமோ அதே போல, வடக்கில் நீங்கள் காரணம். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டுவதற்கு உங்களுக்கு எந்த அருகதையும் கிடையாது.

காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் நீதியான விசாரணை நடக்குமாக இருந்தால், குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுவதில் முதலாவது யார் என்பதில் உங்களுக்கும், கருணா குழுவுக்கும், கோத்தாவுக்கும் இடையில் போட்டி ஏற்படும். எங்கள் உறவுகள் கொத்துக் கொத்தாக கடத்தப்பட்டமைக்கு நீங்கள்தான் காரணம்.

நீங்கள் மக்களுக்கு உதவி செய்ய விரும்பினால், உங்களால் கடத்தப்பட்டவர்கள் எங்கே? உங்களுடைய அடிவருடிகளால் கடத்தப்பட்டவர்கள் எங்கே? அதனை வெளிப்படுத்துங்கள். இந்த உறவுகளின் காலடியில் வீழ்ந்து மன்னிப்புக் கேளுங்கள். அதை விடுத்து நீங்கள் நாடகமாடவேண்டாம்.

உங்களுடைய பங்காளி கோத்தா ஆட்சிக்கு வந்து விட்டார். பழையபடி வெள்ளை வான் ஓடத் தொடங்கலாம் என்று நினைத்தால் நாங்களும், மக்களும் அதனை அனுமதிக்கோம். 40 ஆயிரம் மாவீரர்களையும், ஒன்றரை லட்சம் உறவுகளையும் இழந்திருக்கின்றோம். உங்களுக்கு இனியும் பயப்படப் போவது கிடையாது.

நீங்கள் வெள்ளைவான் ஓடுவதை அனுமதிக்க முடியாது. இதை அனுமதித்தால் நீங்கள் பழையபடி உங்கள் கொலைக் கலாசாரத்தை ஆரம்பித்து விடுவார்கள். இதோடு நிறுத்தி விடுங்கள். இல்லையேல் இதே ஆர்ப்பாட்டம் சிறிதர் தியேட்டருக்கு முன்னால் நடக்கும். சில வேளைகளில் சிறிதர் தியேட்டருக்குள் புகுந்து உங்களை யாழ்ப்பாணத்தை விட்டே விரட்டவேண்டி வரும். வாக்குகளால் மக்கள் எதிர்வரும் தேர்தலில் உங்களுக்குப் பதில் சொல்வார்கள். என்றார்.

(ஓ.5,26)

# புதிய சபைமுதல்வர் தினேஷ் பிரதம கொறடா ஜோன்ஸ்டன்

## எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த

கொழும்பு, ஜன. 3

நாடாளுமன்றத்தின் புதிய சபை முதல்வராக அமைச்சர் தினேஷ் குணவர்தனவும், ஆளும் கட்சியின் பிரதம கொறடாவாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் நியமிக்கப்படவுள்ளனர்.

நேற்று நடைபெற்ற ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவாக நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக நியமிக்கப்படவுள்ளார். நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இன்று நாடாளுமன்றம் கூடும்போது மேற்படி தீர்மானங்கள் சபாயநகர் கரு ஜயசூரியவுக்கு அறிவிக்கப்படும். எதிர்க்கட்சித் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவின் பெயரைப் பரிந்துரைத்து ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே சபாநாயகருக்குக் கடிதம் மூலம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-22,44)

## தமிழர்களின்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் அதன் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதன்போது கூட்டமைப்பின் எதிர்கால வியூகங்கள் குறித்தும், ஆலோசிக்கப்பட்டது. இதன்போதே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான் என்பதை நாம் மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டும். இதற்காகக் கட்சியை மேலும் நாம் பலப்படுத்த வேண்டும். நாம் ஒற்றுமையுடன் ஓரணியில் பயணிக்க வேண்டும். எமக்குள் கருத்து முரண்பாடுகள் இருந்தால் பேசித் தீர்க்கலாம். அதைவிடுத்து , முரண்பாடுகளை வளர்க்கக்கூடாது.

தமிழ் மக்கள் தொடர்ந்து எங்கள் தலைமையின் கீழ் ஒன்றாக நிற்கின்றார்கள் ஒரே கொள்கையுடன் நிற்கின்றார்கள் என்பதை விரைவில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாம் வெளியுலகத்துக்கும் சர்வதேசத்துக்கும் காட்ட வேண்டும்.

தமிழ் மக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தாடல்களை கிராமங்கள் தோறும் நாம் ஆரம்பிக்க வேண்டும். எமது மக்கள் சலுகைகளுக்கு விலை போகவில்லை; உரிமைகளுக்கே முன்னுரிமை வழங்குகின்றார்கள் என்பதை தேர்தல் மூலம் இன்னொரு தடவையும் நிரூபிக்க வேண்டும்.

புதிய அரசு தலைமையிலான நாடாளுமன்ற அமர்வுகளில் எமது மக்களின் உரிமைகளுக்காகப் பேச வேண்டிய கட்டங்களில் நாம் பேசியே ஆக வேண்டும். அதேவேளை அரசின் வேலைத்திட்டங்களை ஆதரிக்க வேண்டிய இடத்தில் ஆதரித்தும் எதிர்க்க வேண்டிய இடத்தில் எதிர்த்தும் நாம் பேச வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை நாம் பெற்றுவதற்காக இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் உதவியை நாடி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்"- என்றார். (அ-22)

## இதுவரை...

ளைப் பொறுப்பேற்ற பீ. எஸ். எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்றுப் பகல் ஒரு மணியளவில் உத்தியோக பூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற ஆளுநர் பீ. எஸ்.எம். சாள்ஸ் அங்கு இடம்பெற்ற வரவேற்பு நிகழ்விலும் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு முன்னால் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"35 ஆண்டுகள் அரச சேவையில் கடமையாற்றிய நான் இறுதிக் காலத்தில் அந்த சேவையை நிறைவு செய்யாது செல்வதில் எனக்குச் சம்மதமில்லை. அதுதொடர்பான அத்தனை விடயங்களையும் தாம் கவனத்தில் கொள்வதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் எனக்கு ஆளுநர் நியமனத்தை வழங்கியுள்ளார்.

நான் வடக்கு ஆளுநராகப் பதவியேற்க வேண்டும் என்பதற்காக அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கையல்ல இது. வடக்கு மக்களுக்கு உள்ள ஏக்கங்கள், அபிலாசைகளைத் தீர்ப்பதற்காக அவரால் எனக்குத் தரப்பட்டதே இந்தப் பதவி.

பதவியைத் தரும்போது ஜனாதிபதி என்னிடம் கூறிய விடயம் 'வடக்கு மக்களுக்கு இதுவரை கிடைக்காதவற்றை செய்து கொடுக்கவேண்டும். இதற்காக ஜனாதிபதி செயலகத்தின் முழுமையான ஒத்துழைப்பு உங்களுக்கு இருக்கும்' என்றார். அதனடிப்படையிலே நான் இங்கு வந்திருக்கிறேன். வடக்கு மாகாணத்தில் சேவையாற்றுவதென்பது இலேசான விடயம் அல்ல என்பது எனக்குத் தெரியும். எனது குடும்பத்தை அர்ப்பணித்துத்தான் நான் ஆளுநராகப் பொறுப்பேற்றுள்ளேன். . நான் இந்த மண்ணைச் சேர்ந்தவள். எமது மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிவேன்.

அரசியல், இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் எனது சொந்த மாவட்டத்தில் அரச சேவையாற்ற சந்தர்ப்பம் கிட்டாதபோதும் தற்போதைய பதவியின் ஊடாக ஓர் இணைப்புப் பாலமாகச் செயற்பட்டு சேவையாற்றுவேன். வடக்கு மாகாண மக்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான இணைப்புப் பாலமாக வடக்கு ஆளுநர் செயலகம் இருக்கும்- என்றார்.

குறித்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் கே. பாலச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், சிவமோகன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மாநகர முதல்வர் இ.ஆனல்ட், வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், ஐந்து மாவட்டங்களின் செயலர்கள், வடக்கின் முப்படைத் தளபதிகள் பொலிசார், உத்தியோகத்தர்கள், வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சஜீவன் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-21,105)

## 3 தூக்கில்...

வர் நேற்று மதியம் சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதேவேளை சுமார் ஒருவருடத்துக்கு முன்னர் இவருடைய மகன் விபத்தில் இறந்தமை குறிப்பிடத்தக்கது.

**கற்கோவளத்தில்..!**

பருத்தித்துறை கற்கோவளத்தைச் சேர்ந்த சிறீசந்திரதாஸ் ஜெயசீலன் (வயது-30) என்பவரும் வீட்டில் தூக்கில் தொங்கி உயிரிழந்தார். சடலம் மந்திகை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**அரியாலையில்...!**

அரியாலை புங்கன்குளப் பகுதியிலும் நபரொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். சிங்கராஜா தியாகராஜா (வயது-56) என்பவரே உயிரிழந்தவராவார். மனைவியும் பிள்ளைகளும் புங்குடுதீவில் உள்ள கோயில் ஒன்றுக்குச் சென்ற நிலையில் இவர் வீட்டில் தனிமையில் இருந்ததாக கூறப்படுகிறது. உடற்கூற்றுப்பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-26,104)

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 840
வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.01.02
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,947,870/-
வெற்றி இலக்கங்கள் 38 39 43 57 Y

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1635
சீட்டிழுப்பு திகதி 02.01.2020
வெற்றி இலக்கங்கள் 31 64 65 70 D
ரூ.43,877,196/=

ராசி
திகதி 02.01.2020
வெற்றி வாரம் 2726
வர்ணம் கபிலம்
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 21 40 41 55
ரூ. 3,536,650/=
03.01.2020 ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம்



# இன்றைய நாள்

**மேடம்:** சிறு செயலும் கடினமாகத் தோன்றலாம். குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனை நல்வழி தரும். தொழில், வியாபாரத்தில் அனுகூலம் பாதுகாக்கவும். பணவரவு சீராக கிடைக்கும்.

**இடபம்:** கடந்த கால உழைப்புக்கு பலன் கிடைக்கும். உங்கள் செயல் திறனை, பிறர் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழிக்கும், வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும்.

**மிதுனம்:** நட்பின் பெருமையை உணருவீர்கள். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.

**கடகம்:** மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் பேச வேண்டாம். மனஅமைதியை பாதுகாப்பதால், செயல்கள் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உருவாகும் குளறுபடியை சரி செய்வீர்கள். சீரான பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** வழக்கத்திற்கு மாறான பணி தொந்தரவு தரலாம். செயல் நிறைவேற கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் அரசின் சட்டத்தினை தவறாமல் பின்பற்றவும்.

**கன்னி:** எதிர்பார்த்தகாரியம்வெற்றிபெறும். நண்பரிடம் சந்தோஷத்தை பகிர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும். கூடுதல் வருமானம் கிடைக்கும். மனைவியின் அன்பினால் மகிழ்வீர்கள்.

**துலாம்:** செயல்களில் நியாயம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் சீரான முன்னேற்றம் ஏற்படும். கூடுதல் பணவரவு கிடைக்கும். ஊட்டச்சத்து உணவினை உண்டு மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** கடந்த கால சிரமத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். அதிக உழைப்பால் பணி இலக்கு நிறைவேறும். ஒவ்வாத உணவினை உண்ண வேண்டாம்.

**தனுசு:** மனதில் அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையும். பணிகளை பொறுப்புடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள மந்த நிலை மாறும்.


**மகரம்:** நண்பரிடம் சொந்த விஷயங்களைபேசவீர்கள். தீர்வுக்கான ஆலோசனை கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சி எளிதில் நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும்.

**கும்பம்:** தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை முடிப்பது அவசியம். உணவினை தரம் அறிந்து உண்ணவும். விருந்து,விழாவில்கலந்து கொள்வீர்கள்..

**மீனம்:** சமூகத்தில் நல்ல மதிப்பீடு உருவாகும். நண்பரின் உதவி எளிதாக கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறும். வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவீர்கள்.


ஜேர்மனி.


ஆஸ்திரேலியா


லண்டன்


பிரேஸில்



பிரான்ஸ்

2020 புத்தாண்டை வரவேற்கும் கொண்டாட்டங்கள், உலகெங்கிலும் பெரும் எடுப்பில் இடம்பெற்றன. அவற்றின் சில ஒளிப்படத் தொகுப்புக்கள்.

# பொறுமையிழந்த போப்பாண்டவர்

வத்திக்கான், ஜன. 3

பொது இடங்களில் சில நேரங்களில் எம்மை அறியாமல் கோபத்தைக் காட்டி விடுவது உண்டு. இதற்கு போப்பாண்டவரும் விதிவிலக்கு அல்லர். வத்திகானில் உள்ள புனித பீட்டர் சதுக்கத்தில் போப்பாண்டவர் பிரான்சிஸ், கூடியிருந்தவர்களைச் சந்தித்தார்.

எல்லோருக்கும் வாழ்த்து தெரிவித்துக்கொண்டே வந்தார். குழந்தைகளை தொட்டு ஆசி வழங்கினார்.

அப்போது ஒரு பெண், அவருடைய வலது கையைப் பற்றிக்கொண்டு தன் பக்கமாக இழுத்தார். அவரிடம் இருந்து போப் ஆண்டவரால் கையை விடுவித்துக்கொள்ள முடியவில்லை. அதைத் தொடர்ந்து அவர் லேசான கோபத்துடன் தனது இடது கையால் அந்தப் பெண்ணின் கையை 2 முறை அடித்து, தன் கையை விடுவித்துக்கொண்டு நகர்ந்து சென்றார்.

இந்தக் காட்சி சமூக வலைத்தளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆனால் புத்தாண்டு வழிபாட்டுக்கு முன்னதாக தனது செயலுக்காக போப்பாண்டவர் பிரான்சிஸ் தனிப்பட்ட முறையில் வருத்தம் தெரிவித்தார்.

'நாம் பல நேரங்களில் பொறுமை இழந்து விடுகிறோம். நானும் அப்படி பொறுமை இழந்து இருக்கிறேன். கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துவிட்ட மோசமான சம்பவத்துக்காக நான் மன்னிப்பு கேட்கிறேன்' என்று கூறினார்.

போப்பாண்டவரின் செயலை நியாயப்படுத்தி பலரும் சமூக வலைத்தளங்களில் கருத்து தெரிவித்துள்ளனர். (ஒ.5)







# பாட்டாசு வெடித்தவருக்கு தண்டம் ரூ. 30 லட்சம்!

சிங்கப்பூர்சிற்றி, ஜன. 3

சிங்கப்பூரில் பொது இடங்களில் பட்டாசுகள் வெடிக்கத் தடை உள்ளது.

கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி தீபாவளியின்போது இந்தியர்கள் அதிகம் வசிக்கும் 'லிட்டில் இந்தியா' பகுதியில் சீனிவாசன் சுப்பையா முருகன் (வயது43) என்ற தமிழர், தடையை மீறி பட்டாசுகளை வெடித்தார்.


இது தொடர்பாக முருகன் மீது வழக்கு தொடரப்பட்டு சிங்கப்பூர் நீதிமன்றில் விசாரணை நடந்து வந்தது. இந்த வழக்கின் இறுதி விசாரணை நேற்று முன்தினம் நடந்தது. இதில் முருகன் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, இந்த வழக்கில் முருகனுக்கு 3 ஆயிரம்சிங்கப்பூர்டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் ரூ. 30 லட்சம்) தண்டம் விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார். (ஒ.5)

# அமெரிக்கத் தூதரகம் தரைமட்டம்

## ஈரானுக்கு எச்சரிக்கை

பாக்தாத், ஜன. 3



ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக அமெரிக்க கூட்டுப்படைகள் அங்கு முகாமிட்டு உள்ளன. ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக தரை வழியாகவும், வான்வழியாகவும் தாக்குதல் நடத்தி வருகின்றன. ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தத் தாக்குதல்களுக்கு எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்காத நிலையில், ஈரான் நாட்டின் ஆதரவு பெற்ற துணை இராணுவ குழுக்கள் மீது அமெரிக்கா குற்றம் சாட்டி வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஈராக்கின் வடக்கில் உள்ள கிர்குக் நகரில் அமெரிக்க படைகள் தங்கி இருந்த இராணுவத் தளம் மீது பயங்கரவாதிகள் ரொக்கெட் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர். தாக்குதலில் அமெரிக்க ஒப்பந்தக்காரர் ஒருவர் உயிரிழந்தார். அமெரிக்க படையினர் பலரும் படுகாயங்களுடன் உயிர் தப்பினர். ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பே தாக்குதலை நடத்தியதாக அமெரிக்கா கூறியது.

இராணுவ தளம் மீதான தாக்குதலுக்கு பதிலடியாக ஈராக்கில் உள்ள ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பின் நிலைகளை குறிவைத்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அமெரிக்கா வான்தாக்குதல் நடத்தியது. இதில் 30க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை ஈரான் வன்மையாக கண்டித்தது. அதேபோல் இந்த வான் தாக்குதல்கள் தங்கள் நாட்டின் இறையாண்மையை மீறியுள்ளன எனவும் இது அமெரிக்காவுடனான உறவை மறுபரிசீலனை செய்ய கட்டாயப்படுத்தும் என்றும் ஈரான் பிரதமர் கூறினார்.

ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பின் மீது நடத்தப்பட்ட வான்தாக்குதலை கண்டித்து ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள அமெரிக்க தூதரகம் முன்பு ஆயிரக்கணக்கானோர் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இராணுவ உடையை அணிந்து வந்திருந்த ஆண்களும், பெண்களும் ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பின் கொடியை கைகளில் ஏந்தி அமெரிக்காவுக்கு எதிரான கண்டன கோசங்களை எழுப்பினர். போராட்டக்காரர்களில் சிலர் அமெரிக்காவின் கொடியை தீயிட்டு கொளுத்தினர். தொடர்ந்து போராட்டக்காரர்கள் அமெரிக்க தூதரகத்தைச் சூறையாடினர்.

அதுமட்டுமின்றி தூதரகத்தின் தடுப்பு சுவர்களுக்கு போராட்டக்காரர்கள் தீவைத்தனர். தூதரகத்தை மூடும்படி முழக்கங்கள் எழுப்பினர். இதனால் அங்கு பெரும் பதற்றம் உருவானது. அதனை தொடர்ந்து உடனடியாக அங்கு அமெரிக்க பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டனர். அவர்கள் தடியடி நடத்தியும் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் போராட்டக்காரர்களை விரட்டியடித்தனர். ஈராக்கில் அமெரிக்க தூதரகம் சூறையாடப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### டிரம்ப்

தூதரகம் சூறையாடப்பட்டதற்கு ஈரான் தான் பொறுப்பேற்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும், இதற்கு ஈரான் மிகப்பெரிய விலை கொடுக்க வேண்டும் என்றும் எச்சரித்தார். இந்த குற்றச்சாட்டை ஈரான் வெளியுறவு அமைச்சகம் உடனடியாக மறுத்துள்ளது. இந்த தாக்குதலைத் தொடர்ந்து, வன்முறைப் போராட்டங்களுக்கு பதிலடி கொடுப்பதற்காக உடனடியாக 750 வீரர்களை அமெரிக்கா அனுப்புகிறது. தேவைப்பட்டால் மேலதிக படைகளை அனுப்பவும் தயாராக உள்ளது. (ஒ.5)

## கைதியைக் கொன்ற வழக்கு: சூடானில் 27 பேருக்கு தூக்கு

கார்ரொம், ஜன. 3

சூடானில் போராட்டக்காரர் ஒருவரை சிறையில் கொடுமைப்படுத்திக் கொன்ற வழக்கில் 27பேருக்கு அந்தநாட்டு நீதிமன்றம் தூக்குத் தண்டனைவிதித்துஉத்தரவிட்டுள்ளது. சூடானில் ரொட்டி உள்ளிட்ட உணவுப் பொருள்கள் விலையேற்றத்துக்கு எதிராக கடந்த ஆண்டு டிசெம்பரில் பெரும்போராட்டம்நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் பள்ளி ஆசிரியரான அகமத் அல் கைர் பாதுகாப்புப் படையினரால் ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டார். இந்த நிலையில் அகமத் அல் கைர் சிறையிலேயே இறந்தார் என அவரதுகுடும்பத்தாரிடம்தெரிவிக்கப்பட்டு அவரது உடல் ஒப்படைக்கப்பட்டது.

இதில் அகமத் அல் கைர் சிறையில்கொடுமைக்குஉள்ளாகி கொல்லப்பட்டார் என குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக வழக்கு விசாரணைநீதிமன்றத்தில்நடந்து வந்தநிலையில், அகமத்அல் கைர் சிறையில் கொடுமைக்கு உள்ளாகித்தான் கொல்லப்பட்டார் என்பதை உறுதிசெய்தநீதிமன்றம்அவரது மரணத்துக்கு காரணமான 27 பேருக்கு தூக்குத் தண்டனை விதித்துள்ளது.

தூக்குத் தண்டனைக்கு ஆளானஅனைவரும்சிறையில்பணிபுரிந்தபாதுகாவலர்கள். (ம)



## ஐ.எஸ்ஸுடன் தொடர்பு துருக்கியில் 100 பேர் கைதாகினர்

இஸ்தான்புல், ஜன. 3

துருக்கியில் ஆறு மாகாணங்களில் ஐஎஸ்ஸுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து துருக்கி அரசு தரப்பில், 'துருக்கியின் அங்காரா, புர்சா, பட்மன், அனடோலு உள்ளிட்ட ஆறு மாகாணங்களில் ஐஎஸ்இயக்கத்துடன்தொடர்புடையவர்கள்என்றசந்தேகத்தின் பேரில் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 40 பேர் ஈராக்கை சேர்ந்தவர்கள், 20 பேர் சிரியாவை சேர்ந்தவர்கள்' என்று தெரிவிக்கப்பட்டது. முன்னதாகசிரியாவில்நடக்கும் மோதல் காரணமாக வெளிநாட்டைச் சேர்ந்த தீவிரவாதிகள் மிக எளிதாக துருக்கியில் நுழைந்து விடுகின்றனர் எனத் துருக்கிஅதிபர்எர்டோகன்விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



பாராட்டி வாழ்த்துகின்றோம்
யாழ்.இந்துக் கல்லூரி மாணவன்
சந்திரகுமார் ஐங்கரன்
வணிகப் பிரிவில்
யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.
வாழ்த்துவோர்: அம்மம்மா, அப்பப்பா
(குடும்பத்தினர்)



யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2020

காலம் :- 09.02.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி
இடம் :- சங்கத் தலைமைக் காரியாலயம், கோண்டாவில்
தலைமை :- திரு.செ.ஜெயக்குமார் (சங்கத் தலைவர்)

குறிப்பு :-
01. மேற்படி சங்கத்தின் ஆண்டுப்பொதுக்கூட்டம் 09.02.2020 அன்று நடத்த இருப்பதால் அங்கத்தவர்கள் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை 17.01.2020 இற்கு முன்னதாக சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
02. அங்கத்தவர்களின் பிள்ளைகள் 2019 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் மற்றும் பல்கலைக்கழக அனுமதி பெற்றிருப்பின் விவரங்களினையும் மேற்படி திகதிக்கு முன்னதாக சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(IN/12174)(11,17)
செயலாளர்
க.செல்வச்சந்திரன்.

NEW SCIENCE HALL
Kannathiddy Road, Jaffna
Chemistry
A/L - 2022
By. G. BENO (B.Sc, PGDE)
Tamil Medium - Sat, Sun 7.30 - 9.30 a.m
English Medium - Sat, Sun 3.30 - 5.00 p.m
சமாந்தரமாக இரு அலகுகளின் கற்பித்தல்.
மாதாந்தப் பரீட்சைகள், மதிப்பீடுகள்.
கடந்தகால வினாவிடை வகுப்புக்கள்.
ஆரம்பம் - 04/01/2020 Saturday

THE ROYAL COLLEGE OF JAFFNA
3 மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By.விஸ்வப்பிரம்மஸ்ரீ ந.விக்னேஸ்வரன்
ஆச்சாரியார். வகுப்புகள் யாழ்ப்பாணம், சங்கானை.
077 6751 649

## கால்பந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஜன.3
தீவக கால்பந்தாட்டச் சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தீவக கால் பந்தாட்ட அணியினை தெரிவுசெய்வதற்கான பயிற்சி முகாம் சனி, ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாமுக்கு 70 கால் பந்தாட்ட வீரர்கள், நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பிரதேச செயலக பிரிவுகளிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பயிற்சி முகாம், தீவக கால்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் இ. ஜெயால்ட் அன்ரனி தலைமையில் யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் முகுந்தனால் நடத்தப்படவுள்ளது. பயிற்சி முகாமைத் தொடர்ந்து தீவக கால்பந்தாட் அணி தெரிவு செய்யப்படவுள்ளது. (23)

## சக்குறா கராத்தே சம்மேளனத்துக்கு 5 பதக்கங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.3
யுனிவேர்சல் சர்வதேச கராத்தே போட்டியில் சக்குறா கராத்தே சம்மேளனத்தின் மாணவர் இரண்டு வெள்ளி பதக்கத்தையும், மூன்று வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர்.

வென்னப்புவ அலப்ரட் பீரிஸ் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற 7 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான மஞ்சல் பட்டிக்கான குமித்தே,காட்டா போட்டிகளில் எ.ஜெ.சியானு வெள்ளிப்பதக்கத்தையும்,12 வயதுக்குட்பட்ட மண்ணிறப் பட்டிக்கான குமித்தே,காட்டா போட்டிகளில் எ.ஜெ.அனோசியன் வெண்கலப்பதக்கத்தையும்,14-15 வயதுக்குட்பட்ட மண்ணிறப் பட்டிக்கான குமித்தே போட்டியில் அனுசியன் வெண்கலப்பதக்கத்தையும் சுவீகரித்துள்ளனர். இவர்கள் மூவரும் சகோதரர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (23)





# அரையிறுதிக்கு விண்மீன் அணி



யாழ்ப்பாணம், ஜன.3
சூரியமகால் ஆதரவுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் வைத்தியர் மயிலேறும்பெருமாள் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட தொடரில் விண்மீன் அணி அரையிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

குறித்த கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் 4வது நிமிடத்தில் விண்மீன் அணி வீரர் நிதுசன் ஒருகோலைப் பதிவு செய்ய அடுத்த இரு நிமிடங்களில் நியூட்டன் அணி வீரர் ஒரு கோலைப் பதிவு செய்து பதிலடி கொடுத்தார். அதன் பின்னர் அதிரடியான ஆட்டத்தை விண்மீன் அணி வெளிப்படுத்த நிதுசன், காண்டீபன், ஜோன் கெனடி ஆகியோர் ஒவ்வொரு கோலைப் பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் விண்மீன் அணி 4:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்திலும் விண்மீன் அணியின் ஆதிக்கம் மேலோங்கி காணப்பட்டது. விண்மீன் அணி வீரர்கள் நிதுசன், காண்டீபன் ஆகியோர் ஒவ்வொரு கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் பலாலி விண்மீன் அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. (ம-422-23)

## ஞானம்ஸ் – அளவெட்டி மத்தி இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.3
மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11பேர் பங்கு பற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

## ஆசிகாவுக்கு மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.3
கடந்த, ஆண்டு நேபாளத்தின் காத்மண்டுவில் நடைபெற்ற 13 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான பளுதுக்கல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற வடக்கின் இரும்புப் பெண் என்றழைக்கப்படும் யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி.ஆசிகாவுக்கு கந்தரோடை அருள் விநாயகர் சனசமூக நிலையத்தால் மதிப்பளிக்கப்பட்டார். இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கந்தரோடை அருள் விநாயகர் சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், மதிப்புறு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (23)







## இங்கிலாந்து அணிக்கு பீற்றர்சன் ஆலோசனை

ஜேம்ஸ் ஆண்டர்சன் அல்லது ஸ்டூவர்ட் பிராட் ஆகியோரில் ஒருவரை நீக்கி, கூடுதலாக துடுப்பாட்ட வீரர் ஒருவரை சேர்க்க வேண்டும் என பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. செஞ்சூரியனில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியில் ஸ்டூவர்ட் பிராட், ஜேம்ஸ் ஆண்டர்சன், ஆர்ச்சர், சாம் கர்ரன் (சகலதுறை ஆட்டக்காரர்), பென் ஸ்டோக்ஸ் (சகலதுறை ஆட்டக்காரர்) ஆகிய 5 வேகப்பந்துவீச்சாளர்களுடன் களம் இறங்கியது.

அனுபவ வீரர்களான ஸ்டூவர்ட் பிராட், ஜேம்ஸ் ஆண்டர்சன் ஆகியோரால் மிகப்பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை.


அதேவேளையில் தென்னாபிரிக்கா பந்து வீச்சாளர்கள் இங்கிலாந்தின் துடுப்பாட்டத்தை சீர்குலைத்தனர்.

இங்கிலாந்தின் வேகப் பந்து வீச்சு தாக்கத்தை ஏற்படுத்தாததாலும், கேப்டவுன் ஆடுகளம் சுழற் பந்து வீச்சுக்கு சற்று சாதகமாக இருப்பதாக கருதுவதாலும் ஸ்டூவர்ட் பிராட் அல்லது ஜேம்ஸ் ஆண்டர்சன் ஆகியோரில் ஒருவர்தான் 2ஆவது டெஸ்டில் இடம்பெற வாய்ப்பு என இங்கிலாந்து பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் தெரிவித்திருந்தார்.

இது குறித்து கெவின் பீற்றர்சன் தெரிவிக்கையில்; இங்கிலாந்து அணி வெற்றி பெற வேண்டுமென்றால் 2ஆவது டெஸ்டில் பிராட் அல்லது ஜேம்ஸ் ஆண்டர்சனில் ஒருவரை நீக்கிவிட்டு, கூடுதலாக ஒரு துடுப்பாட்ட வீரரை இணைக்க வேண்டும்- என்றார்.

ஆஸ்திரேலியாவில் அவசர நிலை

# கறுப்புப் பட்டியுடன் வீரர்கள் களத்தில்



ஆஸ்திரேலியாவில் காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தீயணைப்பு படை வீரர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இன்று சிட்டினியில் ஆரம்பமாகும் 3ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா அணி வீரர்கள் கறுப்புப் பட்டி அணிந்து களமிறங்கவுள்ளனர் என்று ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் தெரிவித்துள்ளார்.

சிட்னியில் இன்று நியூசிலாந்து - ஆஸ்திரேலிய அணிகள் மூன்றாவது டெஸ்டில் விளையாடவுள்ள நிலையிலேயே டேவிட் வோர்னர் தீயணைப்பு படைவீரர்களை பாராட்டியும், மேலும் உயிரிழந்த தீயணைப்பு படைவீரர்களை கௌரவிக்கும் விதத்தில் கறுப்புப் பட்டியணிந்து விளையாடுவதற்கும் வீரர்கள் தீர்மானித்துள்ளனர்.

காட்டுத்தீயை அச்சத்துடன் நபர் ஒருவர் தனது நாயுடன் அமர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும் படமொன்றை இணையத்தில் பார்வையிட்ட பின்னர் டேவிட் வோர்னர் தனது நன்றியை பதிவு செய்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நான் இந்தப் படத்தை பார்த்த போது மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளேன். இன்று நாங்கள் கிரிக்கெட் விளையாடுவதற்காக மைதானத்தில் இறங்கும் வேளை எங்கள் அணியும், நியூசிலாந்து அணியும் நாங்கள் நினைத்ததை செய்யும் நிலையில், கிரிக்கெட் விளையாடும் நிலையில் உள்ளதால் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள் என்பதை நினைவில் வைத்திருப்போம்.

எனது இதயமும் எனது குடும்பத்தினரின் இதயமும் தீயணைப்பு வீரர்களுடன் உள்ளது. இந்தத் தீயை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. ஒவ்வொரு தீயணைப்பு படைவீரர்களுக்கும், தொண்டர்களுக்கும் குடும்பத்தவர்களுக்கும் நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

### பிங்க் நிற தொப்பியுடன் களமிங்கும் ஆஸி. அணி

ஆஸ்திரேலியா அணி வீரர்கள் இன்றைய போட்டியில் பிங்க் நிற தொப்பி அணிந்து களமிறங்கவுள்ளனர். ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகள் மோதும் மூன்றாவது போட்டியின் போது ஆஸ்திரேலியா வீரர் மெக்ராத்தின் "மெக்ராத் பவுண்டேசன்" எனும் புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு நிதி திரட்டும் முகமாக இன்றைய போட்டியில் ஆஸ்திரேலியா அணி வீரர்கள் பிங்க் நிற தொப்பியை அணிந்து களமிறங்குகின்றனர்.

# கணிக்க முடியாத கேப்ரவுனில் சாதிக்குமா இங்.



தென்னாபிரிக்கா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி இன்று கேப்ரவுனில் ஆரம்பமாகின்றது.

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள், இரண்டு ரி-20 போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி இன்று கேப்ரவுனில் ஆரம்பமாகின்றது.

இந்த மைதானத்தைப் பொறுத்த வரையில் சுழற்பந்து வீச்சு, வேகப் பந்து வீச்சு என இரண்டும் ஒரே மாதியாகத்தான் காணப்படும். இரண்டு பந்து வீச்சையும் இனம் கண்டு துடுப்பெடுத்தாடுவது மிகக் கடினமாக இருக்கும். எனவே இரு அணி துடுப்பாட்ட வீரர்களுக்கும் சவாலனா மைதானமாக இந்த கேப்ரவுன் மைதானம் காணப்படும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலையில் இங்கிலாந்து அணி வேகப் பந்து வீச்சாளர் அல்லது சுழற் பந்து வீச்சாளர் ஒருவரை நீக்கி விட்டு மேலதிகமாக ஒரு துடுப்பாட்ட வீரரை அணியில் இணைக்க தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன. இங்கிலாந்து அணி முதலாவது போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு இந்த மைதானத்தில் பதிலடி கொடுக்கும் முனைப்பில் களமிறங்கும். எனினும் இந்த மைதானத்தில் வெற்றி பெறுவது இங்கிலாந்து அணிக்கு சவாலாகவே காணப்படும்.

தென்னாபிரிக்கா அணிக்கு சொந்த மைதானம் என்றதால் அவர்களுக்கு அந்த மைதானம் பரீட்சையமாகக் காணப்பட்டாலும் இங்கிலாந்து அணியின் பந்து வீச்சை சமாளித்து நிலைத்து நின்று போராட வேண்டிய சூழல் காணப்படும். கடந்த போட்டியில் வெற்றி பெற்றதால் தென்னாபிரிக்கா அணி வெற்றிக் களிப்புடன் களமிறங்கும்.

## FRENCH LANGUAGE CENTRE

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Courses
V. Jegan(Trained in France) DELF A1,A2,B1,B2

40, பலாலி வீதி, அரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம்: 04.01.20 சனி 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி
0779 789 456
ஆரம்பம்: 20.01.20 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## விஸ்டம்

தொழில் நுட்பக் கல்லூரி

தொழினுட்பப் பிரிவு A/L
பொறியியல் தொழினுட்பம் 2022
உயிர் முறைமைகள் தொழினுட்பம் DAY CLASS
ஆரம்பம் 04.01.2020
சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு 077 248 7774

## ES Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
A/L
கலைப் பிரிவு 2022

| | | | |
|---|---|---|---|
| தமிழ் A.K. கீர்த்திராஜன் | இ.நாகரிகம் M. செல்வா | அளவையியல் P. கமல் / T. ஜேகன் | அரசியல் R. பாலகாந்தன் |
| புவியியல் S.P. கரன் | வரலாறு S.S. தாஸ் | நா.அரங்கியல் I. பிரபா | ஊடகவியல் M. கோணேஸ் |
| ICT T. தேவதர்ஷன் | கிறிஸ்தவம் K. சரோன் | ஆரம்பம்: 05.01.2020 ஞாயிறு காலை 9.00 மணி | |

## NEC

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி

வர்த்தகப் பிரிவு A/L 2022
கணக்கீடு K.பாலகஜன்
வணிகக்கல்வி SK.பாலசபேஷ்
பொருளியல்
S.ஜெயக்குமார் V.ஜெகதீஸ்
ஆரம்பம்: 05.01.2020 ஞாயிறு காலை 9.00 மணி

## NEC A/L 2022

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
கலைப் பிரிவு

| | | | |
|---|---|---|---|
| தமிழ் T.S.குகன் | அளவையியல் S.பவன் | இ.நாகரிகம் S.சுரேஸ் | அரசியல் G.ஸ்ரீரஞ்சித் |
| புவியியல் S.சபரிதன் | வரலாறு R.R.ஆனந்தன் | ஊடகவியல் M.கோணேஸ் | ICT T.தேவதர்ஷன் |
| கிறிஸ்தவம் K.சரோன் | நாட. அரங் I.பிரபா | ஆரம்பம்: 05.01.2020 ஞாயிறு காலை 9.00 மணி | |

## SLAS- இறுதிக் கருத்தரங்கு


04.01.2020 சனிக்கிழமை
9 Am - 5 Pm
- முற்றிலும் எதிர்பார்க்கையுடைய புதிய வினாக்கள் மற்றும் வினாத் தொகுப்புக்கள்
- சகல வளவாளர்களும் ஒன்றிணைந்து

P. கமல்தாசன் மற்றும் வளவாளர்கள்
நாவலர் கல்வி நிறுவனம்- ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்-
077111 6739, 076 166 1986

## நாளை ஆரம்பம்

DMI
JAFFNA
கலை | வர்த்தகம் |
தொழில்நுட்பம்
A/L - 2020 BATCH
DAY CLASS
காலை 9.00 மணி

## வேலைவாய்ப்பு




யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு தகுதியானவர்களிடமிருந்து கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1). சாரதி
2). வெல்டர்
3). இயந்திர வேலை தெரிந்தவர்கள்
4). இயந்திர வேலை பழகுபவர்கள்

தகுதியானவர்கள் நாளை (04.01.2020) சனிக்கிழமை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம்தரவும்.

முற்பகல் 10.00 - 1.00 மணிவரை

முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உதயன் பணிமனை
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஆசிரியர் தேவை


ஆண்டு - 11
தமிழ், வரலாறு, சுகாதாரம், சித்திரம்
ஆகிய பாடங்களை வீட்டில் வந்து கற்பிக்க
ஆசிரியர் தேவை.
076 358 4258, 076 396 2454

## VCM INSTITUTE

மனோகராச் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.
A/L 2022
இணைந்த கணிதம்
B. ரவீந்திரன் B.Sc
ஆரம்பம் 06.01.2020
திங்கள்
பி.ப 12.30 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 10 . 1957



மறைவு 14 . 01 . 2019

அமரர்
### கந்தையா தர்மகுலசிங்கம்
(உரிமையாளர் -K.T.M. Oil Mill)

திதி: அட்டமி

அன்புக்கு இலக்கணமாய் அருளின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
கருணையின் வடிவமாய் காதலின் தீபமாய்
எம் வாழ்வில் ஒளிதந்த தெய்வமே!
எங்களிடம் எத்தனை கொள்ளை அன்பும்
கோலோச்சிய பாசம் நிறைந்த பேச்சும்
எண்ண இனிக்கும் இனியதோர் புன்னகையும்
எம்மைவிட்டு மறைந்து ஓராண்டு சென்றதப்பா!
ஆண்டு ஒன்று மறைந்தாலும்
ஆறவில்லை எம்துயரம்

உங்கள் ஆத்மசாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

K.T.M Oil Mill
Kalviyankadu

குடும்பத்தினர்.
077 618 3133

## பணியாளர்கள் தேவை

யாழ். கொக்குவில் ஆடியபாதம் வீதியில் இயங்கும்
ரெஸ்ரூரன்டுக்கு பணியாளர்கள் தேவை.
- கொத்து றைஸ் போடக்கூடியவர்கள்.
- சமையல் தெரிந்த இடியப்பம், பிட்டு தயாரிப்பவர்கள்.
- சமையல் உதவியாளர்கள்.

(CS. 11000) (13.17)

T.N.M. GOLDEN GATE
076 396 2454, 076 358 4258

## A/L Techno World

தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
தொழில்நுட்பபிரிவு
மாவட்ட முதல்நிலை பெற்ற மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்



மதுசாளினி 3B (KIII) 01(BT)
யோகதீபன் 2BC (JAF) 01(BT)
யசிதா B2C (MULLAI) 01(BT)
தனுஜன் B2C (MULLAI) 02(BT)
தர்சன் 3C (KILI) 02(BT)
நிலவன் 2BC (KILI) 03(BT)
ஜந்துசன் A2C (JAF) 03(ET)
அருள்ராஜ் C2S (MAN) 01(ET)
ஜீவரதன் 2BS (MULLAI) 02(ET)
பிரியங்கன் 3C (KILI) 02(ET)
தக்சயன் 3C (MULLAI) 03(ET)

A/L 2020 Day Class 04.01.2020 | 0770175346, 0771703549

## SLAS Open & Limited

உமாசங்கர் & வளவாளர்கள்
விசேட இறுதி கருத்தரங்கு தொடர் 02
பொதுஅறிவு இலங்கை & உலகம்
நுண்ணறிவு
மூகா.உளச்சார்பு } உமாசங்கர்
பொதுஅறிவு இலங்கை & உலகம் } அஜிரன் அமிரா
05.01.2020 ஞாயிறு
9am- 4.30 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
G.K Essay, SL World
நூல் பெற்றுக்கொள்ளலாம்.
நாவலர் கல்வி நிறுவனம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
076 166 1986, 077 741 7143

## SLAS Open & Limited

உமாசங்கர் & வளவாளர்கள்
விசேட இறுதி கருத்தரங்கு தொடர் 1
- கிரகித்தல் - பௌநந்தி
- நுண்ணறிவு - நவநீதன்
- பொது அறிவு - ரஜீவன் இலங்கை & உலகம்
- நுண்ணறிவு - குருபரன்

04.01.2020 சனி
9am- 5.30 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
NEC கல்வி நிறுவனம்
மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோயிலடி.
076 186 1986, 077 741 7143

## போட்டிப் பரீட்சை

விசேட இறுதிக் கருத்தரங்குகள்

SLAS
சனி(4/1), ஞாயிறு (5/1)
உட்பட மூன்று நாட்கள்
9.00 - 4.00
மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்
மொத்த கட்டணம்- 1000/-

SLAcS
சனி, ஞாயிறு
9.00 - 4.00

நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்
சனி, ஞாயிறு
10.00 - 2.00

T.P: 076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100M தூரத்தில்)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.